திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை: 8 22—7—55 வெள்ளி : 14 பக்கங்கள் : விலை 3 அணா மலர்: 51

நேரு சர்க்காரின் நேர்மை இதுதானா

நாட்டுப் பிரிவினையை எதிர்க்கும் விசித்திரச் சித்தர்கள் விளக்கம் பெறுவார்களா?

தென்னாட்டு மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் பெரும்பகுதியையும், தென்னாட்டின் இயற்கை வளப்பம், தென்னாட்டு அரசியல் தலைவர்களின் திறமை ஆகியவைகளையும் கூட சுரண்டி கொழுக்கிறது வடநாட்டு ஏகாதிபத்யம் என ஏதோ பேச்சளவில் என்றில்லாமல் புள்ளி விவரங்களுடன், அனுபவ ஆதாரங்களுடன் அவ்வப்போது தெரிவித்தும், அந்த அநீதிகளை எதிர்த்தும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றிவரும் பணியினைக் கண்டு, காங்கிரஸ் திராவிடர்களில் பெரும்பாலோர் சீறி விழுகின்றனர். எனினும் இவ்விவரம் அறிந்த சிலர் தி. மு. கழகம் கூறும் விளக்கத்தை ஏற்றுத் "தங்களாலியன்ற அளவு ஜாடையாக" வட நாட்டு ஏகாதிபத்யத்தின் போக்கினைக் கண்டிக்கவும் செய்கின்றனர்.

விளக்கம் அறிந்தவர்களில் மற்றொரு சாரார் (அமைச்சர் சுப்பரமணியம் போன்றவர்கள்) தங்களையும் மறந்து தமிழர் என்ற தன்மானத்துடன் ஒரு நாளைக்குத் தீவிரமாகப் பேசுவதும் அடுத்த நிமிடமே தாங்கள் வகித்துவரும் பதவிக்கு ஆபத்து வந்து விடுமோ என்று எண்ணியோ அல்லது வேறெந்த காரணத்தாலோ "வட நாடாவது தென்னாடாவது — இப்படிப் பேசுவது மடமை: தென்னாட்டுக்கு இந்திய சர்க்கார் யாதொரு வஞ்சகமும் செய்ய வில்லை" என்று இப்படியாக சந்துக்கடை சிந்துப் பாடும் விசித்திர சம்பவங்களையும் நாம் கண்டு வருகிறோம்.

எனினும் திராவிடம் எனது தாயகம் என்ற தன்மான உணர்ச்சி கொண்ட ஒரு சில தேசியத் தோழர்களாவது இந்திய பேரரசின் ஏகாதிபத்ய போக்கினையும் ஏக இந்தியா என்ற பேரால் தென்நாட்டைத் தேய்வைத்துவரும் கொடுமையினையும் பகிரங்கமாக எடுத்துக் கூறிவருவது கண்டு நமது பணி வீணாக வில்லையென்ற ஆறுதல் அடைவதுடன் தொடர்ந்து நமது லட்சியப் பாதையில் நடைபோடவும் துணை செய்கிறது.

* மொழி வழித்துறையில் தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளின் உரிமைகள் இந்தியப் பேரரசினரால் புறக்கணிக்கப்பட்டு வருவதுடன் நம் விரலைக் கொண்டே நம் கண்களைக் குத்துவதுபோல ராஜ்ய சர்க்கார்களின் மூலமாக இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது.

* தொழில் வளர்ச்சித் துறையில் எடுத்துக் கொண்டாலும். வட நாட்டுடன் தென்னாட்டை எந்த அளவுக்கும் ஒப்பிட முடியாத நிலையில் தாழ வைக்கப்பட்டிருக்கிறது.

* ஏழை—நடுத்தர மக்களின் வாழ்வுப் பிரச்னையை எடுத்துக் கொண்டாலும் வாழ்வாவதுபாயம் மண்ணாவது திண்ணம் என்று கூறப்படுவது தென்னாட்டு மக்களுக்கும், வாழப்பிறந்தோம் என்பது வடநாட்டுக்கும் இந்த எட்டு ஆண்டு நேரு பண்டிதர் ஆட்சியில் நிரந்தரமாக்கப்பட்டு வருகிறது.

* வெளி நாடுகளிலுள்ள திராவிடர்களாவது ஓரளவு நிம்மதியுடன் வாழ்கின்றனரா யென்றால் அத்துறையிலும், வட நாட்டவர்களை வெளிநாடுகளிலுள்ள கொசு கடித்துவிட்டால் கூட நேரு பண்டிதரின் ஆட்சி உடனே கொக்கரிக்கிறது. ஆனால் திராவிடர்களின் உயிருக்கே அழிவு நேர்ந்தாலும் அல்லது அவர்களின் சாதாரண வாழ்வையே சீர்குலையச் செய்தாலும் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு ஆட்சியாளர்களை ஏன் என்று கேட்பதற்குக் கூட ஆசியாவின் ஜோதிக்கு அக்கறை யிருப்பதில்லை.

யார் இவர்?

முதியவர்; மூதறிஞர்; செயல் வீரர்; கனியின் ஊற்று; வீரததின் வேங்கை இவர் தான் 'பஞ்சாப் செலவு' என்னும் எமது கட்டுரையிற் குறிப்பிட்டப் பஞ்சாப் வீரர்! இவரைப்பற்றி இன்னும் அறிய விழைவோர், ஏற்கனவே வேண்டியவாறு 'திராவிடன்' ஆசிரியருக்குத் தீட்டுங்கள் கடிதம். வெகு பேர் விரும்பினால் விரைந்து எழுதுவோம். —திருவேடம்

* படித்த மாணவர்களுள்பட பாடுபட்டுழைக்கிறோம் வேலை கொடு என்று ஏங்கித் திரியும் பாட்டாளி மக்களின் பிரச்னையிலாகிலும் யோக்கியப் பொறுப்புடன் ஆவன செய்யப்பட்டதா யென்றால் அதுதானில்லை. ஐந்தாண்டுத் திட்டம் என்ற பேரால் ஏற்கனவே கொழுத்திக்கும் வடநாட்டினை மேலும் மெருகு கொடுத்து கொழுக்க வைக்கப்பட்டு வருகிறதேயல்லாது தேய்ந்துவரும் தென்னாட்டினை ஓரளவாவது தலைநிமிரச் செய்யும் நாணயமான காரியத்தில் நேரு சர்க்கார் ஈடுபட்டனர் என்று கூறுவதற்கில்லை.

இன்னும் இதைப்போன்ற ஏராளமான அநீதிகளைப் புரிந்து கொண்டு அனைத்திந்தியாவும் ஒன்று அதனைத் துண்டாடுவது தீது —வடநாட்டில்தான் தொழிற்சாலைகள் பெருகினாலென்ன அதன் வாயிலாக தென்னாட்டவர்களாகிய நாம் உதவி பெறமுடியுமே என்ற வெங்கங் கெட்ட பேச்சுக்களை பேசித்திரியும் 'கனம்'களைப் பற்றியும் அவர்களுடன் பவனி வரும் திருமேனிகளின் போக்கினையும் காணும்போது நாம் வேதனைப்படாமலிருக்க முடியுமா?

நேரு சர்க்காரின் ஆட்சி முறையால் எட்டு ஆண்டுகளாக அவதிப்பட்டுவரும் தென்னாட்டு மக்களின் அவ்வேதனையை மேலும் கிளறும் வகையில் இன்னும் பல விவரங்கள் படம் பிடித்து காட்டுகின்றன. அவைகளைக் கூர்ந்து கவனிப்பீராக:-

விவசாயத் தொழில் புரியும் குடும்பம் ஒன்றின், ஓராண்டு சராசரி வருமானம் வடமேற்கு இந்தியாவில் ரூ. 651: ஆனால் தென்னாட்டில் ரூ. 382 மட்டும்தான்.

வட்டார வாரியாக—வட இந்தியா ரூ. 551; கிழக்கிந்தியா ரூ. 506; மேற்கிந்தியா ரூ. 391; மத்திய இந்தியா ரூ. 417: தென் இந்தியா ரூ. 382—என்று அமைகிறது.

இதுநாம் கூறுவதல்ல. இந்தியப் பேரரசு 1950—51-ல் மேற்கொண்ட அகில இந்திய விவசாயத் தொழில் விசாரணையின் பலனாய் கிடைத்த விவபரங்கள் தாம் இவை.

ஒரு விவசாய குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு சராசரியாக வேலை கிடைக்கும் நாட்கள் வட இந்தியாவில் 289 ஆகும். ஆனால் தென்இந்தியாவில் 181 நாட்களுக்குத்தான் விவசாய குடும்பங்கட்கு வேலை கிடைக்கிறது.

மத்திய இந்தியா 245, கிழக்கிந்தியா 224, மேற்கிந்தியா 196 நாட்கள்—என்று அமைகின்றன.

வேறெல்லாப் பகுதிகளையும்விட தென்

8-ம் பக்கம்

சுவைத்துப் பாரீர்

டபிள்யூ பி. டி. எழிலன்

"டிராஜெடி"!

சிகப்புக் கம்பளமெல்லாம் தூம்பு தூசுத் தட்டி மெருகு ஏற்றித் தயார்படுத்தி ஆய்விட்டதா?

விருந்தினர் வரவேண்டியதுதான் பாக்கி, வந்ததும் அவரது காலடியில் விரித்துவிட விரைந்து நிற்கின்றோம் ஐயனே!

சரி! விருந்திற்கு வேண்டிய உண்டி வகை ஏற்பாடுகளனைத்தும்எப்படியுள்ளன?

எல்லாஞ் செவ்வனே செய்து முடிக்க துரித ஏற்பாடுகள் அத்தனையும் மேற்கொள்ளப்பட்டுவிட்டன பிரபு! எந்நேரத்திலும் தயார்!

நன்று! நன்று!! நாட்டிய ஏற்பாடுகள் என்ன ஆச்சுது?

சென்னை நாட்டிய மாது வைஜயந்தி மாலாவிற்கு அழைப்பு விடுத்தோம். அம்மாதும் அகமகிழ்வுடன் இங்கு வந்து ஆட ஒப்புதல் தெரிவித்துவிட்டார். வாவென்றழைக்க வேண்டியதுதான்! மறுகணமே பறந்தோடி இங்கே குதித்திடுவார். அவ்வளவு தயார்!

மெத்த மகிழ்ச்சி! நம் காலாட்படை, குதிரைப்படை, கடற்படை, விமானப்படை, எல்லாம் 'டிரில்' செய்து காட்டி 'சலாம்' செலுத்த ஒத்திகை ஓயாது நடைபெற்ற வண்ணமுளதா?

ஐயனே! அப்படைகளுக்கு அதுதவிர வேறென்னதான் வேலை? எப்போது பார்த்தாலும் யார் வந்தாலும் அப்படைகளுக்கு அதுதானே வேலை பிரபு! ஒத்திகை, ஒத்திகை, எப்போதும் ஒத்திகைதானே! இம்மியளவும் பிசகாது கஞ்ஞர் சலாம் செய்யக் கையுரம் பெற்றுக் காத்துக்கிடக்கிருர்கள்!

பாராட்டுவோம்! நம் பிரதமர் நேரு, தமது சுற்றுப் பயணத்தைச் சுருக்கிக் கொண்டு இங்கு இப்போது வந்தாக வேண்டுமே! வருவாரா?

பிரபோ! அவரே கூறிவிட்டார். 'இலண்டனில் என்னுல் நீண்ட நாள் தங்கவியலாது, தாயகம் திரும்பவேண்டும். தலைநகரிலே விருந்தினர் வரக் காத்திருக்கிருர். விரைந்தோடி அவ்விருந்தினரை வரவேற்க வேண்டும். நானின்றி அன்னருக்கு ராசோபசாரமா? பருப்பின்றி கலியாணம் நடைபெறுதல் யாங்ஙனம்?'—அவ்வித மெல்லாம் துடித்திடுகிருர். எனவே கண்டிப்பாய் சமயத்தில் வந்தே தீருவார் நேரு!

மெத்தக் களிப்பு! வரவிருக்கும் விருந்தினருடமிருந்து ஏதாவது சேதிவந்துளதா?

வந்திருக்கு பிரபு!

கூறுவதென்னை அச்சேதி?

கூறுதும் கேண்மின்! இந்தோனேஷியாவில் ஒரே அமளியாம்! ஜனதிபதி டாக்டர் சோகர்ஞே தாம் விரும்பிய ஒருவரை இராணுவத் தளபதி யாக்கினராம்! அதுமற்ற இராணுவ அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லையாம்! கலவரம் செய்கிருர்களாம்! சமாளிப்பதற்குச்சங்கடமாகவுமுளதாம்! அதை சரிக்கட்ட இன்னும் எத்தனை நாட்களாகுமோ தெரியவில்லையாம்! அதை அடக்கி ஒழுங்கு செய்வான் வேண்டிசோகர்ஞே தம்நாட்டைவிட்டு இப்போது எங்கேயும் நகரமுடியாதாம்! மெக்காவிற்குப் போவதைக் கூட நிறுத்திக் கொண்டாராம்' இந்தியாவிற்கும் விஜயம் செய்ய இப்போது நிலைமை சரியாக வில்லையாம்! ஆகவே இந்தியாவிற்கு வருவதற்கில்லையாம்!

என்னே! எனது ஏற்பாடுகள் !?—அடடா! இப்படியும் ஆகுமா? நான் கனவில் கூட நினைக்கவில்லையே! நான் கண்ட கனவெல்லாம்: சோகர்ஞ வருகிருர்! அமோக வரவேற்பு! அறுஞ்சுவை யுண்டி பரிமாறல்! நடன அரங்கு! வைஜயந்தி நடனம்! அதனூடே ஆடுஞ் சதங்கை யொலி! ஆ! என்னென்பேன்! என்னென்பேன்!எழிலுறைந்த அபிநயம்! அதைக் கண்ணுறும் விருந்தினரின் களிபேருவகை! நேருவின் சபாஷ் கர கோஷம்! அங்கே ஏனையோர் இன்பந் தோய்ந்து, மெய்மறந்து, தத்தளிக்குங் காட்சி!...ஐயகோ! அனைத்தும் கனவு கனவுதானு? என்னே ஏமாற்றம்! என்னே ஏமாற்றம்!

சரி! யாம் ஒன்று நினைக்க அதுவொழிந்து வேறொன்ருயிற்று!

நடனமாதிற்கு நிலைமையைத் தெரிவித்து சமாதானக் கடிதம் வரைக!

நேருவுங் கூடுமானுல் இலண்டனில் தங்கி சாவகாசமாக இந்தியா திரும்பலாமென்று அறிவிப்பாயாக! ஒத்திகை என்றும் வீண்போகாதென்றுபட்டாளத்தார்க்கு அறிவிப்பாயாக! சிகப்புக் கம்பளத்தை மூடி 'பரணை' மேல் வைப்பாயாக! அந்தோ! 'டிராஜெடி'யா!? பெருத்த ஏமாற்றமா?

கேட்கிருர் பெரியார்?

எது கடவுள்?

பிறப்பு, இறப்பு அற்றக் கடவுளை என்று கூறுகிருய்! அப்போது சுப்ரமணியன், சஷ்டியிலும், கிருஷ்ணன் அஷ்டமியிலும், இராமன் நவமியிலும் பிறந்தார்கள் என்று ஏன் ஜாதகம் கணித்து வைத்திருக்கிருய்?

இராமன் ஆற்றிலே விழுந்து இறந்தான். கிருஷ்ணன் காட்டிலே படுத்திருக்கும்போது அவனுடைய கட்டை விரல் ஆடிக் கொண்டிருந்ததை தூரத்தில் நின்று கொண்டு பார்த்த ஒரு வேடன் இந்தக் கட்டை விரலை ஒரு சிறிய குருவி என்று நினைத்து அம்பு விட்டானும்! உடனே அதில் பட்டு, காயம் உண்டாகி அன்று முதல் அந்தக் காட்டிலேயே பார்ப்பாரற்று, கவனிப்பதற்கு ஆள் இன்றி, தன்னந்தனிமையாகக் கஷ்டப்பட்டுச் செத்தான் என்றல்லவா அவனுடைய மரண சாஸ்திரத்தில் கூறுவதாகப் பாரதத்தில்எழுதி வைத்திருக்கிருன். அது ஏன்?

கூறுங்கள் பதில்!

கெட்டாலும் மேன்மக்கள்?

அண்மையில், அதாவது கடந்த ஏப்ரல் மாதம், பாண்டுங் மாநாட்டிற்கு முந்தியும் பிந்தியும் பாக்கிஸ்தானில் பரபரப்பு ஏற்பட்டது. பாக்கிஸ்தான் பிரதமர் இரண்டாந்தரம் மணந்ததே அப்பரபரப்புக்குக் காரணம்.

46 வயதுடைய **பாக் பிரதமர்** தமது முதல் மனைவி **ஹமீதா** அம்மையார் இருக்கும்போதே, இரு பிள்ளைகள் இலண்டனில் பள்ளிப் பருவத்தை கடத்திக் கொண்டிருக்கும் போதேயும், **அலியாசாதி** என்ற மாதை இரண்டாம் மணம் புரிந்து கொண்டார். அலியாசாதி என்ற அவரது இளம் மனைவி பாதி கானடாவும், பாதி அராபியுமான கலப்புப் பிறப்பு. முகம்மது அலி அவர்கள் கானடாவில் அரசியல் தூதராக பணியாற்றியபோது, அலியாசாதியைச் சந்திக்க நேர்ந்தது, தவறு அந்தரங்கப் பணியாளராக அந்த அம்மையாரைப் பணித்துக் கொண்டார். அவ்வகையில் நட்புமுற்றி அலியாசாதிக்கு 28 வயது வந்ததும் மணம் புரிந்து கொண்டார். எதிர்ப்பு இன்னும் இருந்து கொண்டுதானுளது. எதிர்ப்பில் பாக்கிஸ்தான் மூஸ்லிம் மாதர் சங்கம் முன்னணியில் நிற்கிறது. பிரதமர் பக்கம் முஸ்லிம் வாலிபர் சங்கமும் நின்று இஸ்லாம் பலதாரத்தை அனுமதிக்கிறதென்று காட்டிப் பிரதமரைத் தாங்கி நிற்கிறது. முடிவு போகப்போகத்தான் தெரியும்.

முஸ்லிம் உலகத்தைச் சேர்ந்த மற்றுமொரு பெரும் புள்ளியும் இரண்டாந் தாரம் எடுத்துக் கொண்டுள்ளார்.

ஆப்ரிக்காவில், லிபியா ராஜாவான **இத்ரிஸ்** என்பூார் கடந்த மாதத்தில் மறு விவாகஞ் செய்து கொண்டார்.

அவருக்கு வயது 64 ஆகிறது. அவரது முதல் மனைவியாகிய **பாத்திமா** ராணிக்கு ஓர் ஆண் மகவு பிறந்து, நீண்டநாள் நிலைக்காது, அதன் குழந்தைப் பருவத்திலேயே 1953-ல் இறந்துவிட்டது. அதன் பிறகு ஒன்றும் குழந்தை பிறக்கவில்லையாம். ஒருக்கால் அதன் பொருட்டோ என்னவோ, தற்போது 38 வயது வந்த அலியா லாம்லோம் என்ற அழகிய மங்கையை மணந்து கொண்டிருக்கிருர்.

பாக்கிஸ்தான் பிரதமரின் திருமணத்தை, நைல்நதிப் பெண் குழந்தைகள் என்ற பெயரில் அமைந்த **பின்-யெல்-நில்** என்ற பெண் இயக்கத்தின் தலைவியாகிய மேடம் ஷேபிக் என்பார், மூஸ்லிம் உலகப் பெண் இனத்திற்கே இழுக்கு, எனக் கடிந்துரைத்தார். அவர் இப்போது லிபியா மகாராஜா தமது 64-இல் செய்த மணத்தைக் குறித்து என்ன சொல்லப் போகிருரோ? அவர் இருக்கும் பிரதேசத்திலேயே நிகழ்ந்த சம்பவமாச்சே! எகிப்து பிரதமர் நாசிர்கூட இம்மணத்திற்குச் சாட்சியாமே! எகுபதிய மாதர்கள் என்ன செய்யப்போகிருர்களோ?

வ. ஆ. மாவட்ட தி. மு. க.
கூட்ட அழைப்பு

அன்புடையீர்! 24—7—55 மாலை 3-மணிக்கு திருவண்ணுமலை சாதுக்கள் சத்திரத்தில் ஷை கூட்டம் நடைபெறும். அனைவரும் தவருமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

ஆலோசனைக்கு வரும் தீர்மானங்கள்

1. மாநில மாநாட்டு நிதி.
2. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அறிஞர் அண்ணு சுற்றுப் பிரயாண திட்டம்.

செயலாளர் கொண்டுவரும் இதர தீர்மானங்கள்.

அன்பன், முல்லை சக்தி, செயலாளர்

கேள்வி? பதில்.

அஞ்சாநெஞ்சன்

கே : அறிவு, விஞ்ஞானம், வீரம் இதில் முதல் சிறந்தது எது?

—எம். மாபதி, சுக்ரவார்பேட்டை கோவை.

ப : அறிவு.

*

கே : அஞ்சா நெஞ்சனே, நாங்கள் நினைத்தால் தி. மு. கழகத்தை ஒழித்துக்கட்டிவிடுவோம், இந்த நாட்டு மக்களாயிற்றே என்று விட்டுவைக்கிரேம். என்று எங்களூர் காங்கிரஸ் காரர் ஒருவர் கூறுகிருர், இதைப்பற்றி தங்கள் கருத்தென்ன !

—ராசு, கோவை.

ப : தி. மு. கழகத்தைத் தீர்த்து கட்டி விடுகிறேன் என்று கொக்கரித்த குல்லுகபட்டர் பரம்பரை போலும் அவர். தொலையட்டும் விட்டு வைக்கிரேம் என்று கூறுமளவுக்காகிலும் அக் காங்கிரஸ் தோழரின் புத்தி மராமத்தாயிற்றே அந்த அளவுக்கு நாமும் மகிழ்ச்சி யடைவோம்.

*

கே : சென்னை சங்கீத வித்வத்சபை 29-வது மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசிய சித்தூர் சுப்பிரமண்யப் பிள்ளை, ' நமது தென் தேசத்தில் வழங்கி வரும் திராவிட மொழிகளில் முதன்மையான தமிழ் மொழியில் பழைய காலத்திலிருந்தே சங்கீத உருப்புகள் (பாடல்கள்) எல்லையில்லாமல் இருக்கின்றன என்று சொல்லி விட்டு மற்றொரு இடத்தில் திராவிடமே இல்லை என்று கூறுகிருரே; இதில் எதை நம்புவது !

—ஏ; கே. பரமேஸ்வரி, ஆற்காடு

ப: அம்மையாரே சித்தூரார் கூறியவற்றில் முற்பகுதியை நம்புங்கள். பிற்பகுதியில் அவர் பேசியிருப்பது நமக்கல்ல. பார்ப்பனர்களைத் திருப்தி படுத்தவே அவ்வாறு குறிப்பிட்டிருக்கிருர். சங்கீத உலகில் 'அவாள் கூட்டம்' கவிழ்த்து விடுவார்கள் என்ற அச்சம் சித்தூர் சுப்ரமண்யம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

*

கே : அஞ்சா நெஞ்சனே, திராவிட நாடு எப்போது எப்படி பிரியப்போகிறது !

—பா. நடராசன், கோவை.

ப. தோழரே ஆருடமா கேட்கிறீர்கள்! வடநாட்டு ஆதிக்கத்தை நம் தாயகத்திலிருந்து விரட்டியடிக்கத் தாங்கள் எந்த அளவுக்கு பணியாற்ற முனைகிறீர்களோ அதற்கேற்ப விரைவில் திராவிட நாட்டுப் பிரிவினையில் வெற்றிகிட்டும்.

*

கே : அஞ்சா நெஞ்சரே, இந்தியாவின் பொது மொழியாக அந்நிய மொழியான ஆங்கிலம் அமர அருகதை யற்றது என்றும் இந்தி தான் பொது மொழியாக வேண்டுமென்றும் இங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய கம்யூனிஸ்ட் தோழர் குறிப்பிட்டார் இது பற்றி தங்கள் அபிப்ராயம் என்ன !

—இரா. அ. பழனிச்சாமி, இராசிபாளையம், கோவை.

ப : ...மூர்க்கரை மூர்க்கர்முகப்பர் முதுகாடடில் காக்கை உகக்கும் பிணம் என்றமுதுமொழிக்கு அத்தோழரின் கூற்றை ஒப்பிடலாம்.

*

கே : இவ் வாரத்தில் நிகரில்லாத சினிமா நட்சத்திரம் யார் !

—எ. கே மூர்த்தி, சென்னை,

ப: இந்தியப்பிரதமர் நேரு பண்டிதர்!

பாரதரத்ன நேரு பண்டிதர்,

புதுடில்லி,

இந்தியப் பிரதமரே, நலம் வேண்டுகிறேன், தாங்கள் உலகச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இனிதே டெல்லி திரும்பிய செய்தி யறிந்து மகிழ்ச்சியுற்றேன். ஆனல் மற்ருெரு வகையில் வருத்தமும் ஏற்படுகிறது. தங்களை ஏற்கனவே 'ஆசியாவின் ஜோதி', 'மனிதருள் மாணிக்கம்' என்றெல்லாம் சிறப்புப் பெயருடன் அழைக்கப்பட்டு வருகிறது.

இங்நிலையில், தங்களுக்கு 'பாரதரத்னம்' என்ற பட்டத்தை இந்திய ஜனதிபதி அளித்திருக்கிருர், ஆசியாவின் ஜோதி இப்படி திடீரென, பாரதரத்னமாக மதிப்புக் குறைக்கப்படுவதைக் கண்டு வருந்துகிறேன். இது நிற்க,

புதுடில்லியில் 16—7—55-ம் நாளன்று ராமலீலா மைதானத்தில் தங்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு தாங்கள் பதில் கூறுகையில் 'உலகில் பாரதத்திற்கு பெருமதிப்பு உண்டாகியிருக்கிறது. ஆனல் அதைக் காத்துக்கொள்வதுமக்கள் பொறுப்பு' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

வைதீகர்கள் பூர்விகக் கர்ம பலன் மீது பழியைப்போட்டுத் தப்பித்துக் கொள்வது போல மக்களைச் சுட்டிக்காட்டி அரசியல் வேதாந்தம் பேசுகிறீர்.

நீங்கள் சித்தரிக்கும் பாரதத்துக்கு உலகில் உண்மையிலேயே பெருமதிப்பு வளர்ந்திருக்கிறதென்ருல் அந்த மதிப்பு சீரழியாவண்ணம் கடமையாற்ற வேண்டியது யார் தெரியுமா ஏராளமான அதிகாரங்களை குவித்துவைத்துக் கொண்டு ஆட்சி பீடத்திலேயே அமர்ந்துள்ள நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் அரசியல் யூகத்துடன் நடந்து கொண்டால்தான் பாரதத்தின் பெருமதிப்பு காப்பாற்றப்படும். எனவே நீங்கள் கூறும் பாரதத்திலுள்ள எல்லா ராஜ்யங்களுக்கும், அந்தந்த ராஜ்ய இன கலாச்சார அடிப்படையில் முழு அரசியல் உரிமை அளித்து அனைத்திந்தியாவுக்கும் பொதுப் பிரச்னையான பாதுகாப்பு சம்பந்தப்பட்ட வரையில் மட்டும் அந்தந்த ராஜ்ய மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவின் மூலம் ஆவன செய்யப்படுமானல் பாரதத்தின் பெருமதிப்பு நிலைபெறக் கூடுமேயன்றி உலகத்தை சுற்றி வரவேற்பு பெற்றுவிடுவதாலேயே பாரதம் பெருமதிப்பு அடைந்துவிட்டதென்று கருதுவதும் அதைக் காத்துக்கொள்வது மக்களின் பொறுப்பு என்று உபதேசம் செய்வதும் அரசியல் யூகமற்ற பேச்சாகும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேரு பண்டிதரே, ஐக்கிய ரஷ்யாவின் அமைப்பு எவ்வாறுள்ளது. தனி அரசியல் உரிமையுடன் பல நாடுகளைக் கொண்டது தானே ஐக்கிய ரஷ்யாவின் அமைப்பு. ஆகவே ரஷ்ய நாட்டிலும் அதன் தோழமை நாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்து திரும்பிய தாங்கள், நீங்கள் கூறும் பாரதத்தில் அந்த ஒற்றுமைப் பண்பு ஓங்கி வளருவதற்கு மன வளம் பெருமல் மக்களிடம் வரட்டு வேதாந்தம் பேசுவது விவேகமாகாதுஎன்பதைத்தங்களுக்கு பணிவன்புடன் எடுத்துக்காட்டவிரும்புகிறேன்.

—கூத்தரசன்

●

தோழர் யூ. என். தேபார் அவர்கள்

புதுடில்லி

அனைத்திந்திய காங்கிரஸ் தலைவரே, வணக்கம். சென்ற வாரம் காரைக்கால் வந்திருந்த போது தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசுகையில் 'காங்கிரஸ் (கட்சி) டாக்டர்தான் சிறந்தவர். மற்ற டாக்டர்கள் (கட்சிகள்) பிரயோசனமில்லை'' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

ஒரு சிறந்த டாக்டர் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளமாட்டார், அவரிடம் சிகிச்சைபெறும் நோயாளிகளும், பொதுமக்களுமே அந்த டாக்டரின் திறமையைப் பற்றி எடுத்துக் கூறுவர். ஆனல் உதவாக்கரை டாக்டராயிருப்பவர்தான் தன்னைப் பற்றித் தாமே பீத்திக்கொள்வர். டாக்டர் தொழிலில் மட்டுமல்ல; பிற துறைகளிலும் இத்தகைய விசித்திரத்தைக் காணலாம்.

நிற்க, காங்கிரஸ் (கட்சி) டாக்டர் கடந்த எட்டு ஆண்டுகளாக செய்யும் மருத்துவமும் அதன் காரணமாக மக்கள் படும் அவதியும் நாடறிந்திருக்கையில் நீங்கள் 'முலாம்' பூசும் வித்தையில் ஈடுபட்டிருப்பது கண்டு சிரிப்பாய் வருகிறது.

எட்டு ஆண்டுகளாக வேலையில்லா திண்டாட்டம், உழைப்பாளர்களின் உள்ளக் குமுறல், ஏழை—நடுத்தர மக்களின் இன்னல்கள், நிர்வாகத்தில் மலிந்துள்ள ஊழல்கள் ஆகியவற்றிற்காக காங்கிரஸ் (கட்சி) டாக்டரின் யோக்யதையைக் கண்டு நாடே சிரிக்கிற இந்த லட்சணத்திலா நீங்கள் இப்படிப்பேசுவது! வெட்கம்—வெட்கம்!

—கூத்தரசன்

இராமர்-சரசா

10—7—55 வெள்ளிக்கிழமை யன்று ஓடைப்பட்டி தோழர் கே இராமர் அவர்களுக்கும் தோழியர் சரசாவுக்கும் ஓடைப்பட்டி தோழர் கே. சின்னையன் தலைமையில் திருமண விழா நடைபெற்றது. அவ்வமயம் ஆசிரியர், சவரிமுத்து அவர்களும் மற்றும் பல தோழர்கள் 'மணமக்களை' பாராட்டிப்பேசி வாழ்த்து மடலும் வாசித்தளித்தார்கள் இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்காக ரூபாய் 1-0-0 அனுப்பப்பட்டது. வரப்பெற்ருேம், நன்றி—நிர்வாகி.

தலைமைக் கழகம் : அறிக்கை—22/15

நியமிக்கப்படும் பொதுக்குழு உறுப்பினர்கள் :

★

கீழ்க்கண்டவர்கள், பொதுச்செயலாளரால் பொதுக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிருர்கள் :—

தோழர்கள் :

அ. பொன்னம்பலனர்
காஞ்சி - கல்யாணசுந்தரம்
ஆர். பாலகுருசாமி (சிதம்பரம்)
ஒளியழகன் (குன்னூர்)
கே. ஆர். இராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன்

●

தலைமை செயற்குழு

கீழ்க்கண்டவர்கள் அடங்கிய தலைமைச் செயற்குழு பொதுச்செயலாளரால் அமைக்கப்படுகிறது :—

துணைப் பொதுச்செயலாளர் :

தோழர் என். வி. நடராசன்

செயற்குழு உறுப்பினர்கள் :

தோழர்கள் :

சி. என். அண்ணுதுரை
ஈ வெ. கி. சம்பத்
மு. கருணாநிதி
கே. ஏ மதியழகன்
சி. பி. சிற்றரசு
ஏ. வி பி ஆசைத்தம்பி
தோழியர் சத்தியவாணிமுத்து
கே. கே. நீலமேகம்
ஜி. பி சோமசுந்தரம்
அம்பில் தருமலிங்கம்
மதுரை எஸ். முத்து
கே. வி. கே. சாமி
வி எம். ஜான்
இரா. சாம்பசிவம்
சி வி எம். அண்ணுமலை

இரா. நெடுஞ்செழியன்

பொதுச்செயலாளர். தி மு. கழகம்

'திராவிடன்' சந்தா விவரம்

உள்நாடு

ஆண்டு சந்தா	...	ரூ.	8	0	0
ஆறுமாதம்	...	ரூ.	4	0	0
தனிப்பிரதி	...	ரூ.	0	3	0

வெளிநாடு

ஆண்டு சந்தா	...	ரூ.	9	0	0
ஆறு மாதம்	..	ரூ.	4	8	0
தனிப்பிரதி	...	ரூ.	0	3	6

11. ரா. தணலன்

துவக்கத்திலேயே எவருடைய பாணியையும் பின்பற்றுமல் தனக்கென்று தனி அமைப்போடு எழுதி, காலப்போக்கில் புகழை அள்ளிக் கொண்டவர் தணலன். நிறைய எழுதி கவர்ச்சிகரமான எழுத்தியல்பை தணலன் சொந்தமாக்கிக் கொண்டார். 'கடவுள் முனேத்தார்' என்ற நூலின் வழி இவரது இலக்கிய பணி துவக்கப்பட்டது. கருத்துச் செறிவில் இந்த கட்டுரை சிறந்து விளங்கியது. 'கடவுள் முனேத்தார்' ஆசிரியரின் இலக்கியப் பணிக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கித் தந்தது. பின்னர் எழுதிய 'பதில் கூறுங்கள்?' கவிதைத்தொகுதி ஒரு 'சோதனே'—அவருக்கும், இலக்கியத்திற்கும்!

இது எல்லா நன்மையிலும் தேவையில்லாத படைப்பு... புதிய இலக்கிய விரும்பிகள் எழுத்தாளர்களாகும் வேளேயில், இலக்கியத்தின் வெவ்வேறு துறைகளேயும் வெற்றி கொள்ள வேண்டுமென்று எண்ணுவது இயல்பே எனினும் இந்த ஆர்வம் இலக்கியத்தையே பாழபடுத்தும் தன்மையில் வளர்வது வரவேற்கத் தக்கதல்ல. தணலன் அடுத்து எழுதிய 'புரட்சித் தீயில்'... என்ற சிறு நாடகமும் இத்தன்மை வாய்ந்ததே! கட்டுரையாளர், கவிஞர், நாடகாசிரியர் போன்ற மாறுதல்களே தணலன் பெற்ருர். எதிலுமே ஆர்வம் நிலேத்து நின்றதில்லே. எதிலுமே அவரது தனித்தன்மை தெரிந்ததுமில்லே! பின்னர் வந்த 'வானம்பாடி' சுவையற்ற படைப்பு. கதைப்போக்கும், பண்பும் தமிழகத்துக்கு புதுமையாயினும் அமைப்பும் உயிரற்ற நடையும் இதன் தோல்விக்கு பெரிதும் உதவின, தணலனின் எழுத்துப்பணி வண்ணக் கலவையாயிருந்தபோது தமிழகத்து எழுத்துத்துறையில் தேவையில்லாத ஒரு திருப்பம் வந்து தொல்லே தந்தது.

கற்றறிந்த சில கெட்டிக்காரர்கள் பிரெஞ்சு கதாசிரியர் மாப்பசான், உண்மைத் தத்துவம், சமூகத்தின் உண்மைப் படப்பிடிப்பு, மனிதப் பண்பு என்றெல்லாம் கதைக்க ஆரம்பித்தார்கள் இலக்கியத்திலே 'ஏனே தானே' வென்றிருந்த சில சில்லரைகள் சலசலப்போடு பவனி வந்தன, 'கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே, அதுதானய்யா பொன்னகரம்' என்ற புதுமைப் பித்தனின் சொற்களே 'இலட்சிய மூத்திரையாக்கி'க் கொண்டு இலக்கிய 'சேவை' செய்யத் துவங்கினர்கள். இதனல் இரு 'புதுமைகள்' நிகழ்ந்தன. ஒன்று, அரைகுறைகளுக்கு எல்லே மீறிய செல்வாக்கு—இரண்டாவதாக சில நல்ல எழுத்தாளர்கள் இந்த சுழலில் சிக்கி மதிப்பிழந்தார்கள்.

கண்வீச்சும், புன்சிரிப்பும், காதல் வேகமும் கட்டிலறையும் கதைகளிலே வந்து போயின, தமிழகம் காதல் சோலேயாகவும், காமக் கோட்டமாகவும் மாறிமாறி விளங்கிற்று. பிறந்த மேனியின் பூரிப்பைக் காட்டும் அழகியரின் வண்ண முகப்புகளோடு உண்மைத் தத்துவம் இலக்கியமாக—எண்ணமாக 'உலா' வந்தது!

இவை புதிய மாறுதல் வழங்கிய வரப்பிரசாதங்கள்......

தேவையற்ற இதனே மக்களின் 'உயர்ந்த ரசனே' வளமாக்கி வளர்த்தது. புற்றீசலென புதிய எழுத்தாளர்கள் அரங்க மேறினர்கள். பெண்ணே வர்ணித்து, காதலே எழுதி, கட்டிலறையை விளக்கி புகழ் குவிப்பது சிரமமா, என்ன!

அப்போதைய புதிய விழைவுகளில் வார்த்தெடுத்த 'லீலா ராணி'யை தணலன் எழுதினர்...... இலக்கியத்தில் கதைப்பகுதி என்பார்களே அது இந்த நெடுங்கதையில் நிறைய இருந்தது; திகட்டு மளவிற்கு இருந்தது. இது இல்லாதிருந்தால் அப்போது வெளியான எண்ணற்ற 'படுக்கையறை' படைப்புகளில் 'லீலா ராணியும்' கலந்திருக்கும்...

தணலனின் பசுமையான இலக்கிய வாழ்வு லீலாராணியோடுத்தான் ஆரம்பமாயிற்று. இதனேத் தொடர்ந்து அவர் 'செல்வக் குமரி, அழகு நிலா' ஆகிய இரண்டு பெருங் கதைகளே எழுதினர். 'செல்வக்குமரி தேவையற்ற பிள்ளேத் தயாரிப்பு—'அழகு நிலா'வில் இனிமையிருந்தது. பெருங்கதைக் குறிய நல்ல பண்புகள் அங்கங்கே மிளிர்ந்தன. பாத்திரப் படைப்பும், அறிமுக பாணியும் புகழத்தக்கதல்ல எனினும் வெறுப்பைத் தரவில்லே.

'வாத்தியாரம்மா' 'தாய்' 'பாதாளபைரவி' ஆகிய மூன்று எழுத்தோவியங்களே தணலனின் 'சாகாத படைப்புகளெனலாம். 'வாத்தியாரம்மா'வும், 'தாயும்' சின்னஞ்சிறு கதைகள். சமுதாயத்தின் வழக்கமான நடப்புகள் உணர்ச்சி வேகத்தோடு சித்தரிக்கப்பட்டிருந்தன. வாசிப்போரின் அனுதாபத்தை கிளறும் வகையில் அமைந்திருந்த பாத்திர சிருஷ்டி பாராட்டுதற்குரியது. சத்தற்ற அளப்புகளே அவிழ்த்து விடாமல் தேவையான சொற்களே அடுக்கி மன நிறைவோடு அவை எழுதப்பட்டிருந்தன.

'பாதாளபைரவி' மெருகற்ற தலேப்பால் நியாயமாக, கிடைத்திருக்க வேண்டிய புகழை அது பெறவில்லே—எனினும் ஒப்பற்ற உயிர்ச்சித்திரம் என்பதை மறுப்பதிற்கில்லே.

விபசார விடுதியை மையமாக்கி கதை துவங்குகிறது, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் சரியானுல் எல்லா அநீதிகளும் ஒழிந்துவிடும்' என்ற கருத்திற்கு ஆக்கம் தரும் வகையில் நவீனம் முற்றுப் பெருகிறது. எடுத்தாண்ட கொள்கையில் பழுது இருந்தாலும் எழுதியிருந்த அந்த பாணியை—அமைப்பை இலட்சியத்திற்காக எழுத்தை பயன்படுத்திய தன்மையை வாழ்த்தத்தான் வேண்டும்!

தணலனின் வசந்த காலம் 'பாதாளபைரவி'யோடு வரட்சியாகி விட்டது. அதன் பின் அவர் எழுதிய அனேத்தும் பூரணத்துவம் பெருத கருச்சிதைவுளாகத்தான் காட்சியளிக்கின்றன, எதற்கோ இந்த மாறுதல்! ஆசிரியரின் பெருமை, புத்தகங்களின் எண்ணிக்கை வளர்வதல்ல—கருத்தின் எழில் பெற்ற ஒரே ஒரு படைப்பு போதும், நாடு அவனே புரிந்து கொள்ள.

'கானகத்திலே காதல்' 'காமினியின் காதலர்கள்' பைத்தியக்காரன் நாட்குறிப்பு' 'நடிகன்' போன்ற எண்ணற்ற ஏடுகளே எழுதாதிருந்தால் தணலனின் புகழுக்கு பழுதொன்றும் வந்திராது! செழித்து வந்த நல்ல எழுத்தாற்றலே தேவையற்ற துறைக்கு கொள்ளே கொடுத்தது விரும்பதக்கதல்ல திரைக்கதை எழுத ஆர்வமிருந்தால் அதற்கென்று அமைந்த வழியில் திறமையைக் காட்டலாம்...... இரண்டையும் கலவை செய்து குழப்ப தமிழ் இலக்கியமா கிடைக்க வேண்டும்!

காட்சியில் சுவைத்தரும் நிழ்ச்சிகளே இலக்கியமாக்கி என்ன பயன்! 'பாதாளபைரவி' பிறந்த அதே உள்ளத்திலிருந்து 'காமினியின் காதலர்கள்' வந்த விசித்திரத்தை என்ன வென்று எண்ணுவது! எல்லாவற்றிற்கும் 'கலேமதிப்பு' ஒன்று உண்டு. திறமைக்கேற்றவாறு பற்பல ரகங்களில் அது விளங்கும் இளம் எழுத்தாளர்களிடம் மட்டமான தன்மையில் இந்த 'கலேமதிப்பு' தேங்கிக்கிடக்கும் அக்ரகார எழுத்தாளர்கள் இதிலே சற்று உயர்ந்த 'புத்திசாலிகள்'—அவ்வளவுதான்! இத்தகு தாழ்ந்த 'கலேமதிப்பு' கூட காமினியின் காதலர்களில்' பஞ்சமாகி விட்டது விசித்திரம் நிரம்பிய வேதனே!

அவசர அவசரமாக எழுதி அச்சாக்குவது எளிது. அது காட்டுவது ஆசிரியரின் தேவையை தவிர திறமையை அல்ல. புகழ் என்பது நட்சத்திர மண்டலம்... இத்தகு இரண்டாந்தர ஏடுகள் அதற்கு ஏணிகளாகக்கூட பயன் தராது!—உறுதி

தணலனிடம் வாழும் கருத்துச் செல்வம் வகையற்ற தன்மையில் விரயமாவது விரும்பத்தக்கதல்ல எழுதுவதை மன நிறைவோடு—பொறுப்புணர்ச்சியோடு எழுதினுல் அதுவே போதும்! மட்டரகங்கள் பாதாளத்திலே விழுந்து கிடப்பது பிரச்னேயல்ல நல்ல சிந்தனேயாளர்கள்—திறனுல் மொழிக்கு மெருகை வழங்கியவர்கள் வழுக்குவதை பண்புடையோர் ஒப்பார்.

தணலன் நல்ல தழுவலாசிரியர். மேலேநாட்டு மேதையரின் எழுத்தோவியங்களே அழகுணர்ச்சி மழுங்காது தமிழிலே வார்த்தெடுக்கும் பண்பு தணலனிடம் வியத்தகு முறையில் அமைந்திருக்கிறது, இந்த கட்டுப்பாட்டு மனப்பண்பும் கவனமும் சொந்த எழுத்தோவியங்களில் திரும்பினுல் எத்தனேயோ சிறப்பாயிருக்கும்.

காலம் பல மேதைகளே பிள்ளே மனம் கொண்டோராக உருவாக்கி யிருக்கிறது. அதன் சுழலில் சிக்கி அழிவது எளிது—எதிர் நீச்சல்தான் பண்பாளரின் பாராட்டுதலே பெற்றுத்தரும், எதையேனும் எழுதுவோம்—பக்கங்கள் நிரம்ப வேண்டுமென்ற எண்ணம் நல்ல வளர்ச்சியின் பாற்பட்டதல்ல. அத்தகு நினைப்புடையோரின் சிருஷ்டிகள் இலக்கியச் சந்தையிலே செல்லாக் காசுகளாகிவிட்டிருக்கின்றன, 'எல்லாமே இந்த மக்களிடம் ஜீரணமாகிவிடும்' என்ற கருத்து எப்போதுமே ஆபத்தானது!

தணலன் எழுதிய 'ஆணும் பெண்ணும்' 'ஆள்வோர் யார்?' 'வாழும் உரிமை' போன்றவை புதுமையாக எதையும் சாதித்துவிடவில்லே எனினும் அவை புறக்கணிக்கத் தக்கதல்ல.

கட்டுரை, கவிதை, நாடகம் ஆகியவற்றை எழுதியிருந்தாலும் தணலனின்கதைகளே அவருக்கு புகழைத் தந்தன. ஆகவே அவர் சிறந்த கதாசிரியர்—வருநாளில் தணலன் பூரணத்துவம் பெற்றவராக விளங்க புதிய சிந்தனே உதவட்டும்.

எதிர்காலம் அவரது எழுத்துக்களால் ஒளிமயமாவதை வரவேற்போம்,

ஆசிரியருக்குக் கடிதம்

'திராவிடப்பித்தன்' தரும் கருத்து விருந்து

அன்புடையீர்,

வணக்கம். 'திராவிட நாடு திராவிடருக்கே', 'திராவிடர் இனம்' முதலிய கருத்துக் குவியல்கள் நிறைந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளேத் தொடர்ந்து திராவிடனில்எழுதி வந்த திரு. திராவிடப்பித்தன் அவர்கள் திராவிடனுக்கே ஓர் தனிச்சிறப்பை உண்டு பண்ணினுர்என்ருல் அது மிகைபடக் கூறியதாகாது. திராவிடனில் தற்போது தொடர்ந்து எழுதிவரும் 'ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்' உண்மையில் எந்த எழுத்தாளர்களும் எழுத முன்வராத-எழுதத் துணியாத ஓர் முயற்சிதான் என்பதில் எள்ளளவும் சந்தேகமே கிடையாது. திராவிடப்பித்தனின் இத்தொடர் கட்டுரை மிகத்துணிவான ஓர் புதுமுயற்சி! திராவிட நாட்டுக் கல்வி வரலாற்றைக் கூறுவது எளிதான காரியமல்ல. ஆனுல் இந்தச் சிரமமிகு காரியத்தை திராவிடப்பித்தன் அவர்கள் மிகக்கோர்வையாக தகுந்த புள்ளி விவரங்களுடன் எடுத்துக் கூறும் திறனேக் காணும்போது உண்மையில் அவர் நம் போற்றுதலுக்கும்—வாழ்த்துக்கும் உரியவராகிருர். திராவிடம் இத்தகைய புதிய படைப்புகளேத்தான் எதிர்பார்க்கிறது. வாரந்தோறும் சுவைக்கத் தகுந்த கட்டுரையைத் தரும் திராவிடப் பித்தனுக்கும், திராவிடனுக்கும்என்நெஞ்சுகந்த வாழ்த்துக்கள்—வணக்கம்.

தங்கள் அன்புள்ள

குன்றை-நாகப்பன், 'ப்ருக் சைட்'-குன்னூர்

திராவிடன்

சென்னை : 22—7—55 : வெள்ளி

அடக்குமுறை தர்பார் அடி பணிகிறது!

●

உலக அரசியலில் எத்தனையோ பிடிவாதக்காரர்களும், ஆணவமே தங்களின் உயர்தன்மையின் எடுத்துக் காட்டு என இறுமாந்திருந்த கிறுக்கர்களும், நாம் ஆளப் பிறந்தோம் மற்றவர்கள் நம் ஏவலுக்கேற்ப பணியாற்றப் பிறந்தவர்கள் என்ற தலைக் கொழுப்பேறிய எத்தர்களும், நம்மிடம் படை, பட்டாளம், பதவி அனைத்தும் இருக்கின்றன. இந்த சாமான்ய மக்கள் நம்மை எதிர்ப்பதாவது என்று கொக்கரித்த கோலேந்திகளும் மக்களின் மகத்தான சக்தியின் முன் இறுதியாகக் குனிந்து கொடுத்ததாகவும், சிலர் தங்களுக்குத் தாங்களே அழிவு தேடிக் கொண்டதாகவுமே வரலாறு எடுத்துக் காட்டி புன்னகை புரிகிறது.

ஆனால் இவ்வித அநீதிகளைக் கண்டித்து ஜனநாயகம் என்ற பெயரால் ஆட்சிபீட மேறியுள்ளவர்கள் மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ள சர்வாதிகார மனப்பான்மை படைத்தவர்களையும் மிஞ்சுமளவுக்கு தர்பார் நடத்தும் அவலட்சணங்களை நினைக்குந்தோறும் உண்மையிலேயே அவர்களின் போக்கிற்காக பரிதாபப்பட வேண்டியுமிருக்கிறது.

இவ்வித திருக்கோலத்துடன்தான் இந்தியப் பேரரசும் அதற்குத் துதிபாடி நிற்கும் ராஜ்ய சர்க்கார்களின் நடவடிக்கைகளும் காட்சி யளிக்கின்றன.

சீக்கிய நாடு சீக்கியருக்கே என்ற லட்சியத்தை உள்ளடக்கி பஞ்சாப் மொழிவழி மாநிலம் வேண்டுமென துவக்கத்தில்—வேண்டுகோள் மூலமாகவும் பின்னர் வலியுறுத்தி அறிவித்தும் இறுதியாக அறப்போர் வாயிலாகவும் தங்கள் உரிமையைத் தெரிவித்த அகாலி தளத்தவர் மீதும் அவ்வியக்கத் தலைவர் மாஸ்டர் தாராசிங் உள்ளிட்ட ஏராளமானவர்கள் மீதும் அடக்குமுறையை ஏவிவிட்டனர், பஞ்சாப் சர்க்கார்.

எனினும் இந்த அடக்குமுறை வெறியாட்டத்துக்குப் பணியோம் என்று தங்களின் இலட்சியப்பாதையில் பலவித இன்னல்களுக்கிடையே தொடர்ந்து நடை போட்ட வீரர்கள் மீது பீம்சேன் சர்க்கார் எல்லா அடக்குமுறை வேட்டுகளையும் விட்டுப்பார்த்து இறுதியாக அலுத்துப் போயிற்று. அறப்போர் வீரர்களுக்கு விதிக்கப்பட்ட தடைகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டு அவர்களின் பிரச்னையையும் விரைவில் கவனித்து ஆவன செய்வதாக அறிக்கை விட்டது. அந்த உறுதிக் கேற்ப அத்தலைவர்கள் அறப்போரை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாகவும் தெரிகிறது.

பஞ்சாப் சர்க்கார் சில நாட்களில் அகாலியரின் உரிமைப் போரை நசுக்கி விடலாம் எனக் கணக்குப் போட்டிருக்கலாம். முதலமைச்சர் சச்சார், போராட்டம் துவக்கப்பட்ட சமயத்தில் அதாவது இரண்டு திங்களுக்குமுன் இதுபோலவே கொக்கரித்தார்! மாஸ்டர் தாராசிங்கையும் மற்ற தலைவர்களையும் சிறைப்படுத்தினர்; எனினும் சீக்கிய மக்கள் தொடர்ந்து தங்களின் தலைவர்கள் காட்டி யிருந்த வழியே அறப்போரை நடத்திச் சென்றனர். இரண்டு திங்களுக்குப் பின் பஞ்சாப் சர்க்காருக்கு தெளிவு ஏற்பட்டது. இப்பிரச்னை குறித்து நேரு பண்டிதர் கூட தமது வேண்டுகோளைத் தெரிவிக்கத் தயாராக யிருக்கிறாராம்! ஆக இந்த அளவுக்கு அடக்குமுறை வெறியாட்டம் அங்கே அடி பணிந்துள்ளது.

நமது தி. மு. கழகத்தைப் பற்றிக்கூட ஆச்சாரியார் அவர்களும், அவருக்கு 'மேலானவர்'களும் கணக்குப் போட்டு அடக்குமுறையை ஏவிவிட்டுக் கொக்கரித்து இறுதியாக ஆட்சிபீடத்திலிருந்தே ஓட்டம் பிடிக்கவில்லையா—அது போலவே பஞ்சாப் தனி மாநில அமைப்பு பிரச்னையிலும் பஞ்சாப் சர்க்காரின் முதலமைச்சர் பீம்சேன் சச்சார் அடக்குமுறையையும் தனக்கு "மேலானவர்"களின் பக்கபலத்தையும் துணையாகக் கொண்டு மக்களின் உரிமையை தகர்த்தெறிய முனைந்தார். எனினும் இறுதியாக அவரின் அடக்குமுறை ஆர்ப்பாட்டங்கள் பிசுபிசுத்துப் போய்விட்டதேயன்றி சீக்கிய மக்களின் உரிமைப் போரை அசைக்கவும் முடியவில்லை.

சச்சார் சர்க்கார் பெற்ற இத்தோல்வி திராவிடத்தில் ஆச்சாரியார் சர்க்கார் தேடிக் கொண்ட தோல்விக்குத் துணையாய் நிற்கிறது.

இவ்வாறு இந்தியப் பேரரசு, அந்தந்த ராஜ்யங்களில் தனக்கு பராக் கொடுத்து வரும் ஏஜெண்டுகளாகவுள்ள ராஜ்ய சர்க்காரைக் கொண்டே தனது சுரண்டல் வேட்டையை நீடித்து வரலாம் என்று மேலும் எண்ணினால் அந்த எண்ணம் மண்ணைக் கவ்வும் என்பதையே சச்சார் சர்க்காரின் அடக்குமுறை தர்பார் அடிபணியும் கட்டம் எடுத்துக் காட்டுகிறது.

எனவே இந்தியத் துணைக்கண்டத்தின் முக்கிய பகுதிகளில் கொந்தளித்து வரும் தனி அரசு உரிமைப் போரைக் கூர்ந்து கவனித்து அதுவும் காலங் கடத்தாமல் அந்தந்த பகுதி மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு இந்திய சர்க்கார் இணங்க வேண்டுவது இன்றியமையாததாகும் என்பதை பணிவன்புடன் எடுத்துக் காட்டுகிறோம்.

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள முக்கிய பகுதிகள் மொழிவழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு அந்தந்தமொழி, ஆட்சிமொழியாகவும், அம்மொழி வழி கொண்ட பகுதிகளை இனவழியாகச் சேர்த்து நாலைந்து முக்கிய கூட்டாக உருவாக்கி அதன் மூலம் இந்தியாவின் ஒற்றுமையை காண்பதின் மூலம் தான் இந்திய மக்களிடையே நிரந்தரமான நல்லுறவையும் நிலைபெறச் செய்ய முடியுமே யல்லாது அரசியல் அதிகாரம் தங்களிடம் சிக்கிவிட்ட காரணத்தாலேயே ஏக இந்தியா என்ற பேரால் பிற மாநில மக்கள் உரிமை கோருவதை அடக்கி விடலாம் என்று நினைப்பது அறிவுடைமையாகாது—அது ஆகக்கூடிய காரியமுமல்ல என்பதை நேரு பண்டிதரும் அவரது சர்க்காரும் உணர வேண்டுகிறோம்.

நால்வர் மாநாட்டில் முட்டுகட்டை?

ஜீனிவாவில் நடைபெறும் நான்கு வல்லரசு பிரதமர்கள் (ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ்) மாநாட்டில், ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்பு பிரச்னைபற்றி விவாதிக்கப்பட்டதில், ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் உடன்பாடு ஏற்படாமற் போகவே ஜெர்மன் கொண்டு பேச்சு வார்த்தைக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டு விட்டதாம். இதற்கு ஒரு சமரச வழி கண்டு பிடிக்க நான்கு பிரதமர்களும், தங்களின் வெளி நாட்டிலாகா மந்திரிகளிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளனராம். அவர்களும் முட்டுக்கட்டை தீர வழிவகை காண முயன்றுள்ளனராம்!

சபாநாயகர் ஜே. சிவசண்முகம்

சென்னை சட்டசபைத் தலைவர் ஜே. சிவசண்முகம் அவர்களை இந்திய யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் உறுப்பினர் பதவிக்கு ஜனாதிபதி நியமித்திருக்கிறார். இவர் இப்பதவியை ஏற்றதும் சபாநாயகர் பதவிக்கு சட்டசபை உறுப்பினர்கள் வேறு ஒருவரைத் தேர்ந்தெடுப்பார்களென்று தெரிகிறது.

நடக்க இருப்பவை

வண்ணை கே எஸ். பாண்டியன் படிப்பகம்

தி. மு கழக துணைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் என். வி. நடராசன் அவர்களைப் பாராட்ட 22—7—55 வெள்ளி மாலை 6 மணிக்கு சென்னை—வண்ணை பாண்டியன் திடலில் (கல்லறை மைதானம்) மாபெரும் கூட்டம் நடைபெறும். தோழர் கே எம் கண்ணபிரான் அவர்கள் தலைமையில் கவிஞர் கண்ணதாசன் தோழியர் தேசியமணி சொற்பொழிவாற்றுவர். மாலை 5-மணிக்கு மதுரை மணிவண்ணன் அவர்களின் இசைவிருந்தும் நடைபெறும்.

சோழபுரம் தி மு. க. துவக்க விழா

குடந்தை அடுத்த சோழபுரம் தி. மு. கழக துவக்க விழா 24—7—55 ஞாயிறு மாலை சோழபுரம் பந்தடி மைதானத்தில், தோழர் கோ. நாராயணசாமி தலைமையில் நடைபெறும். தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி நடராசன், பொ. தருமன், குடந்தை ராதா பேசுவர்.

சென்னை 5-வது வட்டத் தி. மு. கழகம்

26—7—55 செவ்வாய் மாலை 6-மணிக்கு வண்ணை நகராண்மைக் கழக மருத்துவ விடுதி பின் பக்கமுள்ள லாலாகுண்டா தோட்டத்தில் மாபெரும் கூட்டம் நடைபெறும். தோழர் இரா. இளந்தென்றல் தலைமை வகிப்பார். தோழர் சி. பி சிற்றரசு, தோழியர் சத்தியவாணிமுத்து பேசுவர்.

திருவள்ளுவர் திருநாள்

ஜூலை இறுதி வாரம்—25 முதல் 31 வரை

கொண்டாட குறள் நெறிக் கழக வேண்டுகோள்

இரண்டு ஆண்டுகட்கு முன்பு புரசை குறள் நெறிக் கழகம், ஜூலை இறுதி வாரத்தையே வள்ளுவர் வாரமெனக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது. அடுத்து 11—7—54 அன்று அண்ணாமலை நகரில் உயர்திரு நாவலர் ச. சோ. பாரதியார் தலைமையில் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் அதே குறிக்கோளுடன் ஜூலை இறுதி வாரத்தில் ஒரு நாளைத் திருவள்ளுவர் திருநாளெனக் குறித்து சென்னை அரசியலார் விடுமுறை அளிக்க வேண்டுமெனவும் அந்த வாரத்தையே வள்ளுவர் வாரமாகக் கொண்டாட வேண்டுமென்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் 26—12—54-ல் மதுரையில் டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற குறள் மாநாட்டிலும் 16, 17—4—55 நாட்களில் சேலத்தில் திரு கி. ஆ. பெ விசுவநாதம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த 'திருவள்ளுவர் நினைவு நாள்' மாநாட்டிலும், 14. 15—5—55 நாட்களில் பெங்களூரில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டிலும், தமிழாசிரியர் மாநாட்டுத் தீர்மானத்தை வரவேற்று வலியுறுத்தித் தீர்மானிக்கப்பட்டுள்ளன. மாநாடுகளில் கலந்துகொண்ட அறிஞர்களும் புலவர்களும் இதனை அறிந்துள்ளனர். எனவே இதனையே மக்கள் எல்லோரும் சாதி சமயக் கட்சி வேறுபாடுகளுக்கு இடமின்றி ஒன்றுபட்டுக் கொண்டாட வேண்டுகிறோம் எனக் குறள் நெறிக் கழகத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இவ்வறிக்கை மூலம் வேண்டுகோள் விடுக்கிறார்.

தோழியர் ஜெயலட்சுமி அம்மையார்

நம் கழகக் கொள்கை யுடையவரும் தம் மக்களை பகுத்தறிவியக்கத்தில் பணியாற்றத் துணை செய்தவர்களுமான சென்னைத் தோழியர் ஜெயலட்சுமி அம்மையார் 27-6-55 அன்று இயற்கையெய்தியமைக்கு வருந்துவதுடன் அவரின் குடும்பத்தாருக்கு சென்னை ஆர். லோகநாதன் பிரதர்ஸ் (லாரி சர்விஸ் கம்பெனி) தங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றனர். நமது ஆழ்ந்த அனுதாபமும் அக்குடும்பத்தாருக்கு உரித்தாகுக.

பங்களா விற்பனை

திருவள்ளூர் தாலுக்கா ஒண்டிக்குப்பம் மணவாள நகரில் இரண்டு கிரவுண்டில் அழகிய பங்களா எல்லா வசதிகளுடன் கூடியது. சரசமான விலைக்கு விற்கப்படும்.

விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வந்து சந்திக்கவும்.

சி. ஆர். பாலசுந்தரம்
28, முத்துகிருஷ்ணன் தெரு
கொண்டித்தோப்பு, சென்னை-1

சீக்கிய சிங்கம்!

'நேருவே திரும்பிப் போம்!' என்ற குரல்—குழுமி யிருந்த கூட்டத்தினரிடமிருந்து பேரிரைச்சலாக எழுந்தது.

பண்டிதநேரு—ஆமாம்! பாரதத்தின் முடிசூடா மன்னன் — ஆசியாவின் ஜோதி—சமாதான வீரர் திகைத்தார் அந்த எதிரொலி கேட்டு! அவர் பேசவிருக்கும் மேடையைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் மத்தியிலிருந்து 'திரும்பிப் போம்' என்ற வார்த்தை திடுமென எழும்போது திகைப்பு ஏற்படத்தானே செய்யும்!

எனினும் திகைபபைத் துச்சமென மதித்து—எத்தனையோ எதிர்ப்புகளை எல்லாம் கண்டவர் அல்லவா—'மைக்' முன்னால் வந்து ஏதோ பேச ஆரம்பித்தார்! அவ்வளவுதான் தாமதம்! ஒருவர் மேடைமீது தாவி ஓடி வந்து நேருவிற்கு முன் இருந்த 'மைக்'கைப் பற்றிக் கொண்டு 'எங்கள் பிரச்னையைக் கவனிக்காத நீர் இங்கு பேச உரிமை கிடையாது. பேசாமல் திரும்பிப்போம்' என்று படபடவெனப் பேசினர்.

பிரதமர் வருகிருர் என்றாலே படையெடுக்கும் போலீஸ்கள் ஏராளம் பாரா போட்ட வண்ணமாகத்தான் இருந்தனர், மாகாண முதலமைச்சர், மற்றும் இதர மந்திரிகள் எல்லோரும் மேடைமீதுதான் அமர்ந்திருந்தனர். இவர்களின் முன்னிலையிலேதான் அவர் 'பேசாதே! திரும்பிப்போ!' என்று கட்டளை யிட்டார்!

நாட்டை ஆளும் எல்லாவகை அமைச்சர்களும் என்ன செய்வதென்று அறியாது இருந்தனர். அமைச்சர் ஆணையிட்டால் அவர் கதி...! ! அவர் அதையெல்லாம் கவனிக்காது—சிறிதேனும் சிந்தையில் போட்டுக் கொள்ளாமல் 'எங்கள் உரிமைக்குப் பதிலளிக்காத நீர் இங்கு பேச வேண்டாம்! வெளியேறும்' என்று விரட்டுகிருர்! அவர்களோ—முதன் மந்திரிகளும்—மந்திரிகளும்!

நேரு வாயடைத்துப் போனர்.

மேடையை தாவிப் பிடித்தவர் இம்மியளவேனும் விட்டுக் கொடுத்தாரில்லை அவன் வாக்குக்குக் கட்டுப்பட்டவர்கள்போல் குழுமியிருந்த மக்கள் எல்லாம் அமைதியாகவே இருந்தனர்; நிலைமையை உணர்ந்த நேருவும்—இதர சகாக்களும் பேசாமல் மேடையைவிட்டு கீழிறங்கிச் சென்றுவிட்டனர் தத்தம் இடத்திற்கு!

இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது!

வெண்புருவென — சமாதானத்தின் சின்னமாகத் திகழும் நேருவிற்கா இந்த வித வரவேற்பு கிடைத்தது, ரஷ்யச் சுற்றுப் பயணத்தின்போதா! ஆஸ்திரியாவை சுற்றிவந்த போதா? டிட்டோவுடன் சம்பாஷணை செய்து கொண்டு பெல்கிரேட் வழியாகப் போய்க்கொண்டிருந்தபோதா! என்றெல்லாம்—நேருவுக்கு கிடைக்கும் மரியாதைகளை—வரவேற்புகளை கண்டு மகிழ்ந்து கிடக்கும் தோழர்கள் அவசரப்பட்டுவிட வேண்டாம்!

சம்பவம் வேற்றங்கும் நடந்ததல்ல! அகண்ட பாரதத்தின் ஒரு பகுதியிலே நடந்தேறி யிருக்கிறது. கடந்த ஒரு வருடத்தில் பஞ்சாப் மாகாணத்தைச் சுற்றிவரும்போதுதான் இச்சம்பவம் நடைபெற்றது.

மேடை மீது ஏறி பேசாமல் திருப்பி அனுப்பியது யார்? அவர்தான் மாஸ்டர் தாராசிங்!

எதற்காக எதிர்த்தார்!

'பஞ்சாப்' பகுதியை தனி மாகாணமாக ஆக்கி, அது சீக்கிய மாகாணமாகத் திகழ வேண்டும் என்பதுதான் அவரது நோக்கம்! பல ஆண்டுகள் பொறுமையுடன் கேட்டும் பலன் கிடைக்கவில்லை—நேரு இப்பிரச்னையைக் கவனிக்கவில்லை! 'மாகாணப் பித்து', 'குறுகியநோக்கம்' என்றுகுரல்வளையை நெரித்தார். அதன் விளைவுதான் இது!

உரிமைக் கோரிக்கையை உதாசீனம் செய்தார் பண்டிதர்! 'சீக்கிஸ்தான்' கேட்பது கண்டு சீறிப் பாய்ந்தார்! சினந்து பேசியவர் தன் எல்லைக்குள் கால் வைத்ததும் பிரதமர் என்று கூடப் பார்க்காது பேசவிடாமல்செய்து விரட்டி விட்டார்!

சாமானியச் சம்பவமா இது! எவ்வளவு தைரியம் இருந்திருக்க வேண்டும் தாராசிங்கிற்கு! உரிமைப் பிரச்னைக்கு உயிரையும் கொடுக்கத தயாராக இருக்கும் வீரர்தான்—தாராசிங் என்பதற்கு எடுத்துக் காட்டாகவன்றோ இருக்கிறது.

ஆம்! சிதறிக் கிடந்த சீக்கியர்களையெல்லாம் ஒன்று திரட்டி—சோரணையற்றுக் கிடந்த அவர்கள் உள்ளத்திற்குச் சூடேற்றி — "சீக்கிஸ்தான்" அடைந்தே தீருவோம் என சங்கநாதம் எழுப்பிய தலைவர் தாராசிங்தானே!

நெல்லிக்காய் மூட்டையென எங்கள் இனம் சிதறிக் கிடப்பதை ஒன்று சேர்த்து — சீக்கிஸ்தான் அமைப்பது எந்த விதத்தில் தவறாகும் என்று இடி முழக்கம் செய்தவராயிற்றே!

உரிமை அவரது உடமை! தனிமாகாணம் காண்பது அவரது தணியாத ஆசை! உள்ளமோ எதற்கும் அஞ்சாதது! பின் உடமையை எதிர்ப்போர் அவருக்குத் தூசுதானே! அவரது உரிமையை மறுப்போர் நேருவானுல்என்ன விட்டுவிடுபவரா! எனவேதான் 'வாபஸ் படலத்தை உண்டாக்கிக் காட்டினர்.

சீக்கிய மாகாணம் காண வேண்டும் என்ற பேரவா இன்று நேற்று ஏற்பட்டதல்ல! பலஆண்டுகளுக்கு முன்பே இயைந்த ஒன்று! மாஸ்டர் தாராசிங் அவர்கள் வெள்ளைக்காரனை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் போதே எழும்பிய ஒன்று! மகாத்மா காந்தி அவர்கள் முன்னே வாதாடிப் பேசி வலியுறுத்தப்பட்ட ஒன்று! பாக்கிஸ்தான் பிரிவினையின் போதே பேசப்பட்ட பிரச்னை அது!

இதனுடைய வரலாற்றை அறிய விரும்பின் மாஸ்டர் தாராசிங் அவர்களின் வாழ்க்கைப் பாதையிலே ஓரளவு நடந்து பார்த்தால் புலனாகும். மேற்கண்டதுபோல அவர்பற்றிய பல திடுக்கிடும் செய்திகளை அங்கே நாம் பார்க்கக் கூடும்.

மாஸ்டர் தாராசிங் அவர்கள் ராவல் பிண்டி ஜில்லாவைச் சேர்ந்த 'காரியல்' கிராமத்தில் பிறந்தவர். அவர் 'காதிரி' குடும்பத்தைச் சேர்ந்தவர் தாராசிங் பிறக்கும்போது ஒரு இந்துவாகத்தான் பிறந்தார். தனது 12-ம் வயதில்தான் 'சீக்கியர்' ஆனுர். இவரின் இயற்பெயர் 'நானக்சன்' என்பதாகும்.

'லியால் பூரி'லுள்ள 'கால்சா' உயர் நிலைப்பள்ளியில் படித்தார்! சிறுவயதிலேயே அரசியலில் குதித்தார். வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்ட கடுமையாக உழைத்தார். காங்கிரஸ்காரர்களோடு கடுமையாகப் பாடுபட்டார்.

இவர் நல்ல தைரியசாலி! தன்னலம் இல்லாதவர்! கலங்கா உள்ளங்கொண்டவர்! சீக்கியர்களின் நலத்திலே அக்கறை கொண்டவர்! வெளி ஆதிக்கத்தை விரட்டிவிட்டு சீக்கிய மாகாணம் காண வேண்டும் என காங்கிரஸ்காரர்களுடன் போராடியவர்.

ஒரு சமயம் பஞ்சாபில் சீக்கியர்களையும்—இந்துக்களையும் அடித்துத்—தாக்கிக்கொண்டு அலைந்தனர் முஸ்லீம்கள், கண்ட இடங்களில் உதைத்தனர்! கூட்டம் கூட்டமாகச் சென்று கொடுமைகள் பல புரிந்தனர். இந்துக்கள் இம்சிக்கப்பட்டனர். சீக்கியர்கள் சிறுமைப் படுத்தப்பட்டனர் அதுசமயம் காங்கிரஸ் கட்சி அமைதியைக் கையாளக் கேட்டுக் கொண்டது. எனினும் முஸ்லீம்கள் விடுவதாக இல்லை!

முஸ்லீம் கட்சியினர் சட்டசபை முன் கூட்டமாகக் கூடிக் கலாம் விளைவித்துக் கொண்டிருந்தனர், அப்போது மாஸ்டர் தாராசிங் அவர்கள் உருவிய வாளுடன் அவர்கள் மேல் பாய்ந்தார்! முஸ்லீம் கட்சியினரின் கொடியைப் பிடித்து இழுத்துக் கிழித்தெறிந்தார்! அதைக் கண்டதும் முஸ்லீம்கள் திடுக்கிட்டனர். அவரது வீரத்தையும்—வாளேந்தும் வகையையும் பார்த்த அவர்கள் பயந்தே போனுர்கள்.

எதிரியிடம் என்ன இருக்கிறது என்பதை எண்ணுமலே மின்சினல் போரிட்டுப் பார்க்கும் தைரியம் உடையவர் மாஸ்டர் தாராசிங். இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது இப்படிப் பல வீரச் செயல்களை அவர் செய்திருக்கிருர். தேச நலனுக்காக 9 முறை சிறைசென்ற தியாகி அவர்!

வாளெடுத்துச் சண்டை செய்யும் வீரர் என்பதோடு இவர் பெருமை நின்றுவிடவில்லை. பஞ்சாபி இலக்கியத்தில் நல்ல தேர்ச்சி உள்ளவர். சிறந்த எழுத்தாளர்! பஞ்சாபியில் தனிப்பாதையைக் கைக் கொண்டவர். இவர் தேகாசிங் என்ற நாவல் ஒன்றை எழுதி நல்ல புகழ்பெற்றவர் மொகலாய அரசர்களின் காலத்தில் உள்ள ஒரு வீரனின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டதே தேகாசிங். இவர் 1925க்கு முன்பிருந்தே பத்திரிகை ஆசிரியராக இருந்து பணியாற்றி வந்திருக்கிருர்! இன்றும் 'டெய்லி பிரபாத்' 'டெய்லி அகாலி' போன்ற பத்திரிகைகளை நடத்தி வருகிருர்.

இந்தியா சுதந்திரம் அடைந்துவிடும் என்றநிலை உருவானபோதே ஜனுப் ஜின்னு பாக்கிஸ்தான் பிரச்னையை கிளப்பினுர். அதுபோலவேதாராசிங்கும் சீக்கிஸ்தான் பிரச்னையைக் கிளப்பினுர். முடிவில் பாக்கிஸ்தான் பிரிவினை தனிநாடு என்ற முறையில் பிரிந்துவிட்டது.

பாக்கிஸ்தான் துண்டிக்கப்பட்ட போது காங்கிரசார் சீக்கிஸ்தான் பிரச்னையைக் கவனிப்பதாக வாக்களித்து அரசாள முற்பட்டனர். அதன்படி மறைந்த சர்தார் படேல் அவர்களிடம் சீக்கியர்களின் ஜனத்தொகைக்குத் தக்கபடி அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என உறுதி பெற்றுக்கொண்டார் தாராசிங்! அதன்படி சீக்கியர்களுக்கு பட்டாளத்தில் 15.1 என்ற சதவீதத்திலும், உத்தியோகத் துறைகளில் 21.7 என்ற சதவீதப்படியும் வசதிகள் வழங்கப்பட்டன. இந்த அளவு வசதிகள்தான் செய்யப்பட்டனவேதவிர 'சீக்கிஸ்தான்' ஏற்பட உறுதி அளிக்கப்படவில்லை! எனினும் நாளைய சீக்கிஸ்தானுக்கு இது வாய்க்கால் வெட்டியது போலாயிற்று என்று தாராசிங் கருதினுர்.

ஆனுல் இந்தச் சலுகையைக் கண்ணுற்றதும் தாராசிங்கின் தோழர்களெல்லாம் காங்கிரசில் போய்ச் சேர்ந்தனர். இதனுல் தாராசிங்கின் கை சற்று தளர்ந்து இருந்தது. என்ருலும் வீரத்திலோ—உணர்ச்சியிலோ குறைபட்டிருக்கவில்லை அவர்.

தன் தோழர்கள் காங்கிரசில் சேர்வதைப் பார்த்து உண்மை நிலையை எடுத்துக் கூறினர். இந்தச் சலுகை தனிச் சீக்கிய மாகாணத்திற்கு உறுதி காட்டாது என்று எடுத்துக் கூறியும் அலட்சியமாக இருந்தனர். முடிவில் 'நீங்கள் தீப்பற்றி யிருக்கும் வீட்டிற்குள் நுழைகிறீர்கள், தீயின் வெம்மையை அனுபவித்தபின் நீங்கள் என்னிடம் வருவீர்கள்' என்று கூறினர்.

அன்று அவர் பேசியது இன்று மெய்யாகிவிட்டது. காங்கிரஸ் சலுகை காட்டி தங்களையே தட்ட ஆரம்பித்ததைக் கண்டதும் இப்போது (சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே) தாராசிங்கின் தலைமையின் கீழ் 'அகாலிதளம்' கண்டு அணிவகுத்து நிற்கின்றனர். காங்கிரஸ் சீக்கிஸ்தானுக்கு வழி கூறுதது கண்டு—கூருதது மாத்திரமல்ல, அதன் தலைவர்கள் அது கூடாது—மாகாணப் பிரிவினை வேண்டவே வேண்டாம் என்று பேசிடக் கேட்டு இன்று போர்க்களத்திலே குதித்திருக்கின்றனர்.

சீக்கியப் பண்பு—சீக்கியக் கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ருல் சீக்கிஸ்தான் தேவை! அடுத்த எல்லைக்குள் இருக்கும் நம்மவர் எல்லாம் ஒன்று சேர்ந்து கூட்டு வாழ்வு நடாத்த வேண்டும் என்ருல் நம் இனத்தின் பெயரால் ஒரு மாகாணம் தேவை! இது தான் சீக்கியச் சிங்கம் தாராசிங்கின்—அகாலிதளத்தவரின் எண்ணம்—கோரிக்கை—இலட்சியம்

ஜின்னு பாக்கிஸ்தான் பெற்ருர் காங்கிரஸ் சுதந்திரம் பெற்றது. சீக்கியர்களாகிய நாங்கள் என்னத்தைக் கண்டோம், கேட்கின்றனர் இப்படி.

'ஆந்திரா' பிரிந்த பின்பும் இல்லை என்று செப்புவது நேர்மையா! முழங்குகின்றனர் இப்படி.

இன்று உரிமையை மதிக்காத பண்டிதர் வந்தார், கட்டுப்பாடுடன் விரட்டினர் எல்லையைவிட்டு! இப்போது அறப்போர் நடந்து கொண்டு வருகிறது. சீக்கியர்களின் தலைவன்—சீக்கிஸ்தானுக்கு வித்தூன்றிய சிங்கம் இன்று சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் அவரது தொண்டர்களோ தினம் தினம் தங்கள் பொன் கோயிலின் முன்னிருந்து புறப்பட்டு போராட்டத்தில் குதித்தவண்ணமே இருக்கின்றனர், 8000க்கு மேற்பட்டவர்கள்வரை சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனராம்! மாதக்கணக்கில் போராட்டம் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

இடையில் துப்பாக்கி தூக்கிச் சண்டைச் செய்யும் அளவிற்கு நிலைமை வளர்ந்துவிட்டிருக்கிறது. பண்டிதர் இந்தியா திரும்பிய பின்தான் ஓரளவு தற்காலிக நிம்மதி தென்படுகிறது.

ஆதியிலே எழுந்த பிரச்னைக்கு அன்காபாத் பண்டிதர் அன்றே முடிவு கட்டியிருந்தால் நிலைமை இவ்வளவு வளர்ந்திருக்குமா!

இதற்கிடையில் பண்டித பந்த் அவர்கள் "சீக்கியர்களின் கிளர்ச்சியை வலுக்கவிட்டால் சீக்கிய நாடு கேட்கும் அளவுக்கு வளர்ந்துவிடும். எனவே இனியும் சும்மா இருக்கக் கூடாது. அடக்கிவிடவேண்டும்' என்று பேசி வருகிருர்.

பஞ்சாப் சர்க்காரும் இந்த அமைப்பை சட்ட விரோதமாக்கி நசுக்கி விடலாமென்று ஆலோசித்துக் கொண்டிருப்பதாகவேறு செய்திகள் வருகின்றன

பஞ்சாப் சர்க்கார் இந்தச் சாதாரண மாகாண அமைப்பு முறைக்கு வழி காணுது அடக்கி ஒடுக்கிவிடலாம் என்று நினைத்து அடாவடித் தனங்களில் இறங்குமேயானுல் நிச்சயம் சீக்கியர்களின் போக்கு தலைகீழ் மாறிவிடும் என்பது ஓரளவு திண்ணம்!

சீக்கியர்கள் இப்போது கேட்கும் சீக்கிஸ்தான் மாகாண அமைப்பு இந்தியாவிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கேட்பதாக இருக்கின்றது. இதற்கிடையில் சீக்கியத் தலைவர்களும் 'இது எங்களுடைய முழுமூச்சான போராட்டமுமல்ல —முனைப்பும் அல்ல, பஞ்சாபை எதிர்த்து ஏதாவது கோஷம் போடக்கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கிற தடையை மீறுவதற்காகவே இது கையாளப்பட்டு வருகிறது. முழுப் போராட்டம் 'மாகாணப் புனரமைப்புக் குழு' அகாலிதளத்திற்குப் பாதகமாக முடிவு செய்தபின் ஆரம்பிக்கப்படும்' என்று கூறிவருகின்றனர்.

சீக்கிஸ்தான் — அவர்களது குறிக்கோள்! எனவே டெல்லி பீடத்தார் அவர்களது குறிக்கோளை நிறைவேற்றுவார்களாக! இன்றேல் வளரும் கிளர்ச்சிக்கு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்!

—ச. வெ. பாண்டியன்

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூ அதனுள்ளே யிருக்குதாம்...?

இந்தியப் பேரரசின் பிரதமர் நேரு பண்டிதர், உலகசமாதானத் துக்காக வெளிநாடுசுற்றித் திரும் பினர்; அவருக்கு அங்கெல்லாம் அளித்த வரவேற்பு இதுவரை யாருக்கும் கிடைக்காத பேறு— இதைக் கண்ட பிறகாவது உணர் வார்களா திராவிட இயக்கத்தி னர் எங்கள் நேரு மகா மேரு என்பதை—என்று இப்படியாக நம் நாட்டு தேசியத் திருமேனி கள் செப்பித் திரிகின்றனர்!

நேரு பண்டிதருக்கு—ரஷ்யா போன்ற நாடுகளில் அளிக்கப் பட்ட மகத்தான வரவேற்பைக் கண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அங்கலாய்க்கவில்லை. அவ்வித மட்டரகமான மனப் பான்மை தி. மு. கழகத்தினரிடம் அறவே இல்லையென்பதை அறி ஞர் அண்ணா, பொதுச் செயலா ளர் நெடுஞ்செழியன் மற்ற சொற் பொழிவாளர்களின் விளக்கங்க ளின் வாயிலாகவும், தி. மு. கழக இதழ் 'நம் நாடு' அதன் சார்பு டைய கழக ஏடுகள் மூலமும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கி றது.

எனவே நேரு பண்டிதர் வெளி நாடுகளில் இன்று பெற்றுவரும் புகழைவிட பன்மடங்கு அதிகப் புகழைப் பெற்றாலும் நாம் அங்க லாய்க்கப்போவதில்லை ஆனால்இந் தியப்பிரதமர் என்றபொறுப்பில் நேரு பண்டிதருக்கு வெளிநாடு கள் காட்டி வரும் மரியாதைக் கேற்ப உள்நாட்டு விவகாரங்க ளில் ஒழுங்கு முறையை நாண யமான போக்கினைக் கொண்டி ருக்கிறாரா என்பதே தென்னாட்டு அரசியலில் தெளிவுடையோர், அரசியல் பூகம் படைத்தோர் குறிப்பாக திராவிட முன்னேற் றக் கழகத்தினர் கேட்கும் கேள்வி யாகும்.

திராவிட இயக்கத்தினர் அறி வுறுத்தி வருவதற்கேற்ப இந்தி யப் பேரரசின் ஆட்சிமுறை யிருக்குமானால், நேரு பண்டித ருக்கு வெளிநாடுகளில் தரப் பட்ட வரவேற்பு—மரியாதைகள் என்றும் நிலைத்திருக்கவும் முடியும்.

ஆனால் இந்தியப் பிரதமரோ உள்நாட்டு விவகாரங்களில் ஊழலை வளர்த்துக் கொண்டு வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்து உலக அமைதிக்குப் பாடு படுகிறோம் என்று வாய்ப் பந்தல் போடுவதில் அர்த்தம் இருக்கி றதா என்று கேட்கிறோம்.

● பஞ்சாபில் சீக்கியர்கள் தனி மாநிலம் அமைக்கவேண்டி உரிமைப் போரில் இறங்கியுள்ள னர்.

● குஜராத்தியர் கூட்டாட்சி முயற்சிக்கு மராட்டிய மாவீரர் கள் கடுமையான எதிர்ப்புகாட்டி வருகின்றனர்.

● திராவிடத்தை—அரசியல், பொருளாதாரம் தொழில் துறை ஆகிய அனைத்திலும் சுரண்டிக் கொழுக்கும் வடநாட்டு ஏகா திபத்திய ஆட்சிமுறையையும் அதன் அடக்குமுறைப் போக் கினையும் எதிர்த்து அறப்போ ராட்டத்தில் தி.மு. கழகம் ஆற்றி யுள்ள தொண்டும் அண்மையில் (15-7-1955) கல்லக்குடி அறப் போரில் மீண்டும் ஈடுபட்டுள்ள விவரமும் யாவரும் அறிந்ததே யாகும்.

● கட்டாய இந்தி திணிப்பை எதிர்த்து ஆகஸ்டு 1-ம் நாள் தீவிரப் போராட்டத்திலிறங்க முடிவெடுத்திருக்கிறது, திராவி டர் கழகம்.

● திராவிடத்தின் ஒரு பகுதி யான ஆந்திரத்திலோ — வரவு செலவு துண்டுவிழும் காரணத்தி னால், ஆந்திர மக்கள் மீது மேலும் வரியைத் திணிப்பதை நிறுத்தி ஆந்திரத்திலிருந்து— புகையிலை விற்பனை வரி மூலம் மட்டும் ஆண்டுதோறும் இந்தி யப் பேரரசு கொண்டு செல்லும் 19-கோடி ரூபாய் வரிப்பணத்தி லிருந்து துண்டு விழும் 3½-கோடி ரூபாயைக் கேளுங்கள் என்று ஆந்திரப்பிரதேசக் காங்கிரஸ் தலைவர், ஆட்சி பீடத்திலுள்ள கோபால் ரெட்டி அமைச்சர் குழுவை வற்புறுத்துகிறார்.

● கேரளக் கன்னடப் பகுதி களிலும் இந்தியப் பேரரசின் பிற்போக்கினை எதிர்த்துகுமுறல்.

● பொதுவாக — ஏழை — நடுத்தர மக்கள் அனைவரும் இந் தியப் பேரரசின் ஆட்சிமுறை யால் வாழ்விழந்து தவிக்க வேண் டிய இரண்டுங்கெட்டான் நிலை வளர்ந்து வருகிறது.

இந்த பெருங் குறைபாடுகளை யும் — கோரிக்கைகளையும், மக்க ளின் உரிமைகளையும் மதித்து ஆவன செய்ய முற்படாமல், அனைத்தையும் புறக்கணித்து விட்டு உலக சமாதானத்தை நிலை நாட்டப் போகிறேன் என்று அதுவும் தாமாகவே மார்தட்டிக் கொண்டு ஓடுகிறார் நேரு!

நேரு பண்டிதரின் இப்போக் கினை எண்ணிப் பார்க்குந்தோ றும் நமக்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது. "ஒரு ஊரில் விசித்திர அம்மையார் ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் முடியில் ஈறும் பேனும் நிரந்தரமாகக் குடிகொ ள்ள ஆரம்பித்தது. ஊரில் உள்ள மற்ற பெண்கள் இதைப்பற்றி அறிவுறுத்தியும் அந்த ஈறும் பேனையும் அறவே அகற்ற முற் படவில்லை. அதற்குப் பதிலாக வேறு வழியைக் கண்டு பிடித்தா ளாம்! ஈறும் பேனும் நிறைந்த தனது கொண்டையை ஒய்யார மாக வாரி முடித்து—பளபளப் பான தாழம்பூவை வைத்துக் கொண்டு வெளியூர் விருந்துக்குச் சென்று திரும்பி வந்தாளாம்! வெளியூரிலிருப்பவர்கள் இந்த அம்மையாரின் அழகிய கொண் டையைப் பார்த்து மெச்சினார் களாம்! அவர்களுக்குத் தெரியா தல்லவா? அந்தக் கொண்டையில் ஈறும் பேனும் மலிந்திருப்பது!

ஊர் திரும்பிய அந்த அம் மையாரைப் பார்த்து மற்றவர் கள் அய்யோ இவள் கொண்டை யைப் பார்த்தீர்களா, ஈறும் பேனும் கொண்டவளுக்கு இந்தக் கொண்டை ஒரு கேடா என்று கூறினராம்.

அந்த—ஒய்யாரக் கொண்டை யாம் தாழம்பூ அதனுள்ளேயிருக் கிறதாம் ஈறும் பேனும் என்ற கதையைப் போலத்தான் இந்தி யப் பேரரசின் பிரதமர் நேரு பண்டிதர் உலக சமாதானத்திற்கு உழைப்பதாகக் கூறிக்கொண்டு வெளிநாடுகளில் வரவேற்பு பெறுவதும்!

ஆகவே, வெளிநாடுகளின் வர வேற்பில் மதிமயங்கி உள்நாட்டுப் பிரச்னைகளை, மக்களின் நியாய மான உரிமைகளைத் தட்டிக்கழிப் பது இறுதியில் பெறும் ஏமாற்ற மாக முடியும் என்பதைத்தான் நேரு பண்டிதருக்கும், இந்தியப் பேரரசுக்கும் தி. மு. கழகம் அறி வுறுத்துகிறதே யல்லாது, வேறில்லை.

இந்த எடுத்துக் காட்டை உட னடியாகக் கவனியாமல், மக்க ளின்மனவேதனையை வளரவிட்டு வேடிக்கைப் பார்த்து இறுதியாக குனிந்து கொடுப்பது, விவேக மற்ற செய்கையாகும் என்பதைத் தான் திராவிட நாட்டினர் மட்டு மல்ல—மேலே எடுத்துக் காட்டி யுள்ளபடி இந்தியத் துணைகண் டத்தின் பல்வேறு இன—மாநில மக்கள் தங்களின் நேர்மையும் நியாயமுமான உரிமைப் போரின் மூலம் எடுத்துக் காட்டி வருகின் றனர்.

உலகத்தை வலம் வரும் நேரு பண்டிதர் இந்த உள்நாட்டு விவ காரங்களை இனிதே முடிக்க நேர்மையுடன் முனைவாரா? இது தான் இந்தியப் பேரரசின் ஆதிக் கத்தில் சிக்கி அவதியுறும் மக்க ளின் மகத்தான கேள்வி?

—நக்கீரன்

இந்தி எதிர்ப்பு அறப்போர்

ஆகஸ்டு கிளர்ச்சி - திராவிட கழகத் திட்டம்

"வடநாட்டு ஆட்சியையும், ஆதிக் கத்தையும் எதிர்க்கவும், இந்தி யைப் புகுத்தித் தமிழ் நாட்டை யும் அதன் கலாச்சாரத்தையும் தமிழ் மொழியையும் ஒழித்து, தமிழ்நாடு வட நாட்டாருக்கு நிரந் தர அடிமைநாடாக இருக்க மத் திய அரசாங்கம் என்பதும், வட வர்களும், இந்நாட்டுப் பார்ப்பனர் பலரும் பலமான ஏற்பாடு செய்து வருவதாக இக்கூட்டம் உறுதி யாக நம்புவதால் இதன் எதிர்ப் பைக் காட்டவும், இனி இந்நாட் டவர்கள் இந்தியப் பிரஜையாக இருப்பதற்கு இஷ்டப்படவில்லை என்பதைக் காட்டவும், இந்திய அரசாங்கத்துக்கு உணர்த்தவும், இந்தியதேசியக் கொடி என்பதை ஆகஸ்டு 1-ந் தேதியன்று தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு இந்தி யப் பிரஜை என்பவரும் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்பதாக இக்கூட்டம் தீர்மானிக்கிறது.'' என்று, 17-7-55 அன்று திருச்சி யில் நடைபெற்ற திராவிடர் கழக நிர்வாகக் குழுவில், பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் முன்மொழிய கூடியிருந்த பலரும் ஏற்றுக் கொள்ள, தீர்மானம் ஒன்று நிறை வேற்றப்பட்டிருக்கிறது.''

*

கழகத் தோழர்களுக்கும்-பொது மக்களுக்கும் வேண்டுகோள்

17-7-55-ம் தேதி திருச்சியில் எனது தலைமையில் நடந்த திரா விட கழக மத்திய நிர்வாகக் கமிட் டிக்குழு தீர்மானப்படி செயலில் இறங்குபவர்கள் யாவரும் அந் தந்த வட்ட, மாவட்ட கழக மூல மாகவும், கிராமத்தில் உள்ளவர் கள் நேரிடையாகவும் தங்கள் பெ யர்களை அருள்கூர்ந்து "விடுதலை" பத்திரிகைக்கு உடனே தெரிவித் துவிட வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறேன்,

ஈ. வெ. ரா.

வேலூரில் மும்முனைப் போராட்ட நினைவுநாள் கூட்டம்

வ. ஆ. மாவட்ட துணைச்செயலாளர் கருத்தோவியன் தலைமை உரையாற்றும் காட்சி — தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுகிறார் — 'நம்நாடு' துணையாசிரியர் முகவை ஆர். எஸ். பாண்டியன் முழக்கமிடுகிறார்

விவரம்—அடுத்த பக்கம்

—புகைப்படம்: வி. எம். மோகனவேல், வேலூர்

வேலூரில் மும்முனைப் போராட்ட நாள்

உறுப்பினர்கள் கூட்டத்தில் வேலூர் தோழர்களின் உறுதிப்பாடு

வட ஆ. மாவட்ட தி மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் சருத்தோவியன் அவர்களின் அழைப்பிற்கிணங்க 17-7-55 ஞாயிறு பிற்பகல் 4-மணிக்கு வேலூர் டவன் ஹாலில் வேலூர் நகரத்திலுள்ள கிளைக் கழகங்களின் பிரதிநிதிகளும், அதனையடுத்துள்ளசிற்றூர்களின் கழகப் பிரதிநிதிகளும் கொண்ட உறுப்பினர் கூட்டம் ஒன்று இனிது நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்து கூட்டத்தை நடத்தித் தரும்படி தோழர் சருத்தோவியன் கேட்டுக் கொண்டதற்கிணங்க தி. மு க துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் தலைமை வகித்து ஒவ்வொரு கிளைகளின் நிர்வாகிகளும் மற்ற உறுப்பினர்களும் எந்தப் பிரச்னையிலும் மனம்விட்டு விவாதித்து பேசி—பிறகு ஒரு முடிவுக்கு வந்து விட்ட பின் அம்முடிவுக்கு ஏற்ப கட்டுப்பாடுடன் செயலாற்றும் தன்மையுடன் பணியாற்ற வேண்டுமென்றும் அப்பண்புதான் ஜனநாயகத்தை வளர்க்க முடியுமென்றும் மற்றும் கிளைக் கழகங்கள் இயங்க வேண்டிய முறைகளையும் எடுத்துக் கூறினர்.

பிறகு தோழர்கள் வே. அ. இளஞ்செழியன், எம். பி. சாரதி எம்.சி., வேலூர் பாண்டியன், பாலகிருஷ்ணன், சருத்தோவியன் ஆகியோர் தங்கள்கருத்துக்களை எடுத்துக் கூறியதோடு எவ்வகையிலும் கழக வளர்ச்சிக்கு உறுதியுடன் பணியாற்றுவோம் என்று கூறினர். பிறகு 'நம்நாடு' துணைஆசிரியர் முகவை ஆர். எஸ். பாண்டியன் கழக உறுப்பினர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைகளை எடுத்துக் கூறினர்.

இறுதியாக என். வி நடராசன் தமது முடிவுரையில் தி. மு. கழகத் தோழர்களாகிய நாம் எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய தொண்டு ஏராளமாயிருப்பதால், நமது அண்ணா அவர்களும் பொதுச்செயலாளரும் கழக சார்பில் அவ்வப்போது கூறும் வேண்டுகோளைக் கேட்டு நமது கொள்கையில் விரைவில் முழுவெற்றியைக் காணவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பிறகு நன்றி கூறலுடன் இக்கூட்டம் மாலை 6-மணிக்கு முடிவுற்றது.

பொதுக் கூட்டம்

அன்று மாலை 7-மணிக்கு வேலூர் வேலப்பாடியில் இளைஞர் தி மு. கழக சார்பில் மும்முனைப் போராட்ட நினைவு நாள் கூட்டம் சிறப்புற நடந்தேறியது. மழை தூறிக் கொண்டிருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

இக்கூட்டத்திற்கு வ. ஆ. மாவட்ட துணைச்செயலாளர் அ. சருத்தோவியன் தலைமை வகித்து மும்முனைப்போராட்ட நினைவு குறித்துப் பேசினர், அடுத்து தோழர் அன்பரசு பேசியதும், முகவை ஆர். எஸ். பாண்டியன் மும்முனைப் போராட்ட நினைவு நாளைக் கொண்டாடும் நாம், நாட்டுப் பிரிவினைப் போராட்டத்திலும் வெற்றி பெறுவோம் என்பதை எடுத்துக் காட்டி சொற்பொழிவாற்றினர்.

இறுதியாக தோழர் என். வி. நடராசன் பேசுகையில் நேரு சர்க்கார் சற்று அரசியல் நாணயமுடன் யூகமுடன் நடந்திருந்தால் நாட்டுப் பிரிவினை எழுச்சிக்கு அவசியமே யிருக்காதென்றும் ஆனால் ஏறத்தாழ ஆங்கில ஏகாதிபத்தியத்தின் மறுபதிப்பு போலவே நேரு சர்க்காரின் ஆட்சிமுறை திராவிடத்தையும் இந்தியாவின் மற்றும் சில பகுதிகளையும் சுரண்டி வாழ்கிறதென்றும் எனவே திராவிடத் தனி அரசை நிறுவ நாம் கொள்ள யிருக்கும் முயற்சிக்கு மும்முனைப் போராட்டம் ஓர் எடுத்துக்காட்டாகு மென்றும் விளக்கியதோடு ஜவகர்லால் நேருவின் உலகச் சுற்றுப் பயணத்தைப் பற்றியும் இன்றைய சமுதாய அமைப்பின் இழிநிலையையும் அதனைப் போக்க வேண்டிய அவசியம் குறித்தும் பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் இளைஞர் தி மு. கழக செயலாளர் நன்றி கூற இரவு 10 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

ஜெயராமன் - சாரதா

சென்னை சிந்தாதரிப்பேட்டை திராவிட இயக்க தோழர் கே. ஜெயராமனுக்கும் என். ஆர். சாரதாவுக்கும் தி. மு. க. பொதுக்குழு உறுப்பினர் சி. டி. டி. அரசு அவர்கள் தலைமையில் 10—9—55 ஞாயிற்றுக்கிழமை 4-30 மணிக்கு (இராகுகாலத்தில்) வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தலைவர் திரு அரசு அவர்கள் பேசும்போது இராகு காலத்தில் திருமணம் செய்வதென்றால் சிறிது தைரியம், கொள்கையில் உறுதி கொண்டவர்கள்தான் இப்படிப்பட்ட புரட்சிகரமான திருமணம் செய்ய முடியும் மேலும் ஜெயராமன் சிறு வயதிலிருந்து பெரியாரிடம் தத்துப் பிள்ளையாக வளர்ந்தவர், அதுமட்டுமல்ல பெரியாருக்கு ஆபத்து ஏதும் நேராமல் இரவும் பகலும் பாதுகாத்தவர் அப்படிப்பட்ட ஜெயராமனுக்கு திருமணம் என்றால் நமக்கேற்படும் மகிழ்ச்சிக்கு அளவுண்டோ என்றார்,

அடுத்து சென்னை மாவட்ட தி. மு கழக முன்னாள்செயலாளர் கே. கோவிந்தசாமி பேசுகையில் தோழர் ஜெயராமன் திராவிடர் கழகத்திலிருந்து நாங்கள் வெளியேறும்போது ஜெயராமனும் கொள்கைக்காக விடுதலை ஆபீசிலிருந்த வேலையை விட்டு வந்து விட்டார். பாவம் இப்போது கார்ப்பரேஷன் பார்க்கில் தோட்ட வேலை செய்கிறார் என கேள்வியுற்று வேதனைப்பட்டேன்.

அடுத்து காங்கிரஸ் தோழர் பி. ஏ மூர்த்தியும் தோழர்கள் எ. எ. கபாலமூர்த்தி, பி. சிவலிங்கம், ஆர். நாகலிங்கம், பி. கோபால் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசியபின் தோழர் அரசு அவர்கள் முடிவுரையாக மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

வண்டிப்பெரியாரில் திராவிடன்

வண்டிப்பெரியார் சுற்றுவட்டார எஸ்டேட் தோழர்கள் திராவிடன் இதழுக்கு கீழ்க்கண்ட முகவரியில் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

எஸ். ஆறுமுகம்
செல்லம் புக்ஸ்டால்
வண்டிப் பெரியார் (தி. கொ.)

இராயப்பேட்டை

சென்னை இராயப்பேட்டை தி.மு.க. (37-வது வட்டம்) பணிமனையில் 17—7—55 ஞாயிறு காலை 9 மணிக்கு கழகப் பணிமனையை தோரணங்களால் அலங்கரித்து கொடியேற்றுவிக்கப்பட்டு தோழர் பொ ஏழுமலை அவர்கள் தலைமையில் மும்முனைப் போராட்ட நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது ஞானசேகரன் ம. கி, இராமலிங்கம், அரங்கநாதன், பொ ந. சண்முகம், கோ. இளவரசு ஆகியோர் பேசியபின், துணைப் பொதுச்செயலாளராக திரு. என். வி. நடராசனர் அவர்களைத் தேர்ந்தெடுத்த பொதுச் செயலாளரைப் பாராட்டியும், துணைப் பொதுச் செயலாளரை மகிழ்ச்சியோடு வரவேற்றும் தீர்மானம் நிறைவேற்றியபின் செயலாளர் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவடைந்தது.

சென்னை 3-வது வட்டம்

சென்னை 3-வது வட்ட தி. மு கழக சார்பில் மும்முனைப் போராட்ட நினைவு நாள் காலை 6 மணிக்கு கொடியேற்று விழாவுடன் ஆரம்பமாயிற்று. பிறகு அச்சடிக்கப்பட்ட துண்டு அறிக்கைகள் வட்டம் பூராவும் விநியோகிக்கப்பட்டு சுவரொட்டிகள் மூலம் போராட்டத்தில் உயிர்விட்ட வீரர்களுக்கும் சிறை சென்ற தோழர்களுக்கும் நன்றியும் பாராட்டுதலும் வணக்கமும் தெரிவிக்கப்பட்டது. மாலை 8 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் வி. கே. பி. சாமி தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது கழகத் தோழர்கள் அப்பாதுரை, ஞானதேசிகன், எஸ். கோபால், சின்னமணி ஆகியோர் நமது போராட்டங்களைப் பற்றியும் ஏகாதிபத்தியத்தை கண்டித்தும் பேசினர், கடைசியில் இன்னிசை விருந்தளிக்கப்பட்டது.

துணைப் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் என். வி. நடராசன் அவர்களையும், புதிய செயற்குழு உறுப்பினர்களையும் அவர்களை தேர்ந்தெடுத்த பொதுச் செயலாளர் அவர்களையும் பாராட்டி ஒருதீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. விழா இரவு 9-45 மணிக்கு இனிது முடிவடைந்தது.

கைத்தறி ஆடையையே அணியுங்கள்.

முதல் பக்கத்...தொடர்ச்சி

இந்தியாவில்தான் வேலை நாட்கள் மிகக் குறைவு; வட இந்தியாவில்தான் வேலை நாட்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தகுந்தது.

விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாது போய்விடுவதும், பற்றுதவேலை கிடைப்பதும் கூட தென்னாட்டில்தான் அதிகமாக நிலவுவதாக விசாரணை தெரிவிக்கிறது.

சுமார் 20 சதவிகித தொழிலாளர்களைப் பாதிக்கும் வண்ணம் தென்னாட்டு விவசாயிகளுக்கு ஆண்டொன்று 115 நாட்களுக்கு வேலை கிடைப்பதில்லை. ஆனால் அதே காலத்தில் வட இந்தியாவில் விவசாயிகளுக்கு வேலை கிடைக்காமலிருப்பது 44 நாட்களுக்கு மட்டும்தான்!

வேலை கிடைப்பதில் வட இந்தியாவில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அதிகமான நாட்கள் வேலை கிடைக்கின்றன.

செலவு வகையில் வடமேற்கு இந்தியாவினர் மிக அதிகமாகவும் மேற்கு இந்தியாவினர் மிகக் குறைவாகவும்செலவிடுபவர்களாயிருக்கின்றனர். அவர்கள் முறையே ரூ. 674; ரூ. 392 செலவிடுகின்றனர்.

மத்திய இந்தியா ரூ. 428; வட இந்தியா ரூ. 548: கிழக்கிந்தியா ரூ. 528; தென்னிந்தியா ரூ. 397 —என்ற வகையிலிருக்கின்றன.

மொத்த வருமானத்தில், ஒரு விவசாயக் குடும்பத்தில் 6.5 சதவிகிதம் — அல்லது ரூ. 30 சில்லறைச் செலவுகள் செய்யப்படுகின்றனவாம். இந்தச் சில்லறைச் செலவுகளில் புகையிலை, வெற்றிலை பாக்கு, பீடி, சிகரெட், சோப்பு, மருந்துமுதலியன அடங்குகின்றனவாம்.

இந்த வகைச் செலவில்வேறெல்லா வட்டாரங்களையும்விட தென்னாட்டினர்தான் அதிகமாகச் செலவு செய்கின்றனர்.

இந்தியாவில் மொத்தமாக ஒரு விவசாயக் குடும்பத்தின் சராசரி வருடச் செலவு ரூ. 458ல் 80 சதவிகிதத்திற்கு மேல் உணவுப் பொருள்களுக்காகச் செலவிடப்படுகின்றதாம்.

தோழர்களே, அனைத்திந்தியா என்ற பிடிப்பில் திராவிடம் சிக்குண்டு இருப்பதால் ஏற்படும் விளைவுகள்தான் மேலே காட்டப்பட்டிருக்கும் ஏற்றத் தாழ்வுகள்.

நம் நாட்டை விட எல்லா வகையிலும் மிகச் சிறியதான பிற நாடுகள் தலை நிமிர்ந்து வாழ்வதேன்?

வாழ்வில் மட்டிலுமா—உலக அரங்கிலும், அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் போன்ற நாடுகளுடன் சம அந்தஸ்து பெற்றுள்ளனவே! இதற்குக் காரணம் என்ன? அந்நாடுகளுக்கெல்லாம் ஏதாவது தனிச் சிறப்போ அல்லது அசைக்க முடியாத ஆற்றலோ உண்டா? இல்லை.

அவைகள் அனைத்தும் தனி அரசியல் உரிமை பெற்றிருப்பதாலேயே வல்லரசுகளுடன் போட்டியிட்டுக்கொண்டு தங்கள்வாழ்வை வளப்படுத்துகின்றன.

எனவே, திராவிடம் தனி அரசியல் உரிமையுடன் இயங்க இந்திய சர்க்கார் சற்று நேர்மையுடன் துணைசெய்யட்டும். நான்கைந்து ஆண்டுகளுக்குள்ளாக திராவிடம் விவசாயம் உள்ளிட்ட மற்றெல்லாத் தொழில் துறையிலும் பொருளாதார நிலையிலும் மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ள புள்ளி விவரப்படி முறையே வடநாட்டைவிட வளப்பமுடன் திராவிடம் வாழ்வதுமட்டுமல்லாமல், வடநாட்டுக்கும் வழிகாட்டும் ஆற்றல் பெறுகிறதா இல்லையா என்பதை உலகோருக்கு எடுத்துக் காட்டிவிடலாம்.

நேரு சர்க்காரை இதற்கான வகையில் ஆவன செய்யத் தூண்டுவதே காங்கிரஸ் திராவிடர்கள் தங்களின் கடமையாகக் கொள்ள வேண்டுமேயன்றி வடநாட்டு ஆதிக்கத்தின் நேர்மையற்ற போக்கினைத் தட்டிக் கேட்கும் திராவிட இயக்கத்தினர் மீது சீறி விழுவது விவேகமாகாது.

எனவே காங்கிரஸ் திராவிடத் தோழர்களே, பரந்த கண்ணோட்டக்காரர்களே மேலே கண்ட புள்ளி விவரங்களைப் போன்ற பல ஆதாரங்களாவது உங்களின் கண்களை விழிக்கச் செய்யுமாக.

—நக்கீரன்

பட்டுக்கோட்டை

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 14—7—55ல் பட்டுக்கோட்டை வட்ட தி. மு. க. அலுவலகத்தில் மேற்படி வட்ட செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் கூடி 21 பேர்கள் கொண்ட செயற்குழு உறுப்பினர்களையும் கீழ்கண்ட நிர்வாகிகளையும் தேர்ந்தெடுத்து கழகம் அமைக்கப்பட்டது,

செயலாளர் எம். பேரான், துணைச் செயலாளர் எஸ். அருளானந்தம், பொருளாளர் முத்து தங்கையா, மாவட்டப் பிரதிநிதி சி. வைத்தியநாதன்.

இந்தி ஆதிக்கத்தின் அடிச்சுவடு.

மூலம்: போத்தன் ஜோசப் தமிழாக்கம்: ஏ. டி. பிரான்சிஸ், பெங்களூர்

● முன்னுரை: தேசிய மொழியாக இந்தி திணிக்கப்பட்டதால் பம்பாய் மகாணத்திற்கு நேர்ந்துள்ள அவதியை படம் பிடித்து காட்டுகிறார், ஆங்கிலத்தில் சிறந்த ஆசிரியராக விளங்கும் போத்தன் ஜோசப், தமது தினத்தாளாகிய டெக்கான் ஹெரால்டு தலையங்கத்தின் 'பம்பாய்' மௌடீகம்' என்ற தலைப்பின் கீழ் ஆதிக்க வெறியின் முடிவுகளை புலப்படுத்துகிறார். தேசிய மொழிவெறி உண்டாக்கி யிருக்கும் கொடுமைகள் தென்னாட்டவர் அறிந்து கொண்டு சபலமற்றவர்களாக மாற வேண்டும் என்பதற்காக தலையங்கம் தீட்டியிருக்கிறார்.

*

ஆங்கிலத்தை ஒதுக்கிவிட்டு அந்த இடத்தில் இந்தியை நிறுத்த வேண்டுமென்ற தீவிரத்தால் ஆங்கிலம் சித்ரவதை செய்யப்பட்டதுமன்றி, குறுகிய காலத்திற்குள் இந்தியை திணிக்க விரும்பிய வெறியினால் இன்று பம்பாய் மாகாணமெங்கும் முக்கிய பிரச்னையாகிய மொழித் துறையில் பங்கம் தோன்றியுள்ளது. வேதனையும் சோகமும் ஒருங்கே எழுந்துள்ளன. இந்தி எங்கணும் பரவுதற்கென்று இந்திய அரசியல் சட்டத்தால் வகுக்கப்பட்ட கால வரைக்குள் சட்டத்திற்கேற்ப இந்தியைத் திணித்திட ஆத்திரமாக முனைந்து ஏதேச்சதிகார செயல்களில் ஈடுபட்டது—மோரார்ஜி தேசாயால் நடத்தப்படும் பம்பாய் அரசாங்கம். அதன் விளைவு, கல்வித்துறையில் பள்ளிப் படிப்புக்கான பாடத் திட்டங்களில் தலையிட்டு தாம் விரும்பியவற்றை வகுப்பதற்கான ஏகாதிபத்திய போக்கு தோன்றிவிட்டது. அந்த போக்கு இன்று ஆயிரக் கணக்கான மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை வெற்றிகரமாக முடித்துவிட்ட போதிலும் கல்லூரி படிப்பை ஏற்பதற்கு தகுதியற்றவர்களாக செய்து விட்டிருக்கிறது. பள்ளியில் ஆங்கிலத்தை கைவிட்டு இந்தியை போதனா மொழியாக மாற்றியதால் வந்த வினை—பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு இயலாத நிர்கதியான நிலையில் தவிக்கும்படி விடப்பட்டிருக்கின்றனர். கல்லூரிக் கல்விக்கு அவசியமான ஆங்கில அறிவு மிக மிக குறைந்துவிட்டிருக்கிறது மாணவர்களிடம். அவர்களின் ஆங்கில மொழிப் பயிற்சிக்கு தக்க முறையில் சூழ்நிலைக்கேற்றவாறு கல்லூரிப் படிப்பை திருத்தியமைப்பதென்றால் சாதாரணமாக அந்த கல்விக்கு இருக்க வேண்டிய பண்பும் தகுதியும் கைவிடப்பட்டு அழிவுப் பாதையில் அடியெடுத்து வைப்பதாகத்தான் முடியும். இவ்வாறு அழிவுக்கு ஆக்கந் தருவதுதான் சுதந்திரம் ஆகுமா? பம்பாய் தற்போது அனுபவித்து வரும் தொல்லைகள், எமது இயற்கையான கலாச்சாரத்தை மீண்டும் மறுமலர்ச்சி செய்யப் போகிறோம், என்று கூறிக் கொண்டு அவசரமாக நடவடிக்கைகளில் ஈடுபகின்ற முன்னாலோசனையில்லாத மாறுதல்களை புகுத்தத் தெரியாத தீவிரவாதிகளும் கல்வித் துறைவில் அனுபவமற்றவர்களுமே காரணமாவர். இந்த வெறித் தனத்தால் மாணவர்களின் கல்வியும், வாழ்க்கையின் முன்னேற்றமும் தடைபட்டிருக்கின்றது. கல்லூரி படிப்பு வெறும் ஜோதிடம், ரேகை சாஸ்திரம், மந்திரம், மாயஜாலம், என்பவற்றோடு சம்பந்தப்பட்டிருந்தால், தற்போது மாணவர்கள் கற்றிருக்கின்ற இந்தி மொழிப் பயிற்சி ஏற்றதாக இருந்திருக்கும். அரசியலார் தமது சட்டத்தின் வாயிலாக விரும்புவதுபோல 1965-க்குள் எல்லோருமே நிபுணர்களாகி விட்டிருக்கலாம். ஆனால் கல்லூரிப் படிப்பு கலை, விஞ்ஞானம் முதலியவை பற்றியதாகையால் இந்தி அறிவு பொருந்தாததாக இருப்பதால் மணவர்கள் பாதிக்கப்பட்டிருகிறார்கள்.

தேசிய மொழியைப்பற்றி மௌடீகத்தால், மூடநம்பிக்கையோடு துரிதமாகஏகாதிபத்ய வெறியோடு செயலாற்றுவதை கவனிக்காமலிருக்க முடியாது. 1948-ல் அந்த அவசரக்காரர்கள் விடுத்த அரசாங்க அறிக்கையின் காரணமாக முதல் மூன்று படிவங்களில் ஆங்கிலத்தை அடியோடு நீக்கிவிட்டார்கள் — உதவாக்கரை இந்திக்கு இடமளிக்க வேண்டுமென்பதற்காக. இது முதல் நடவடிக்கை. இரண்டாவதாக ஆங்கிலத்தை போதனா மொழியாக இருப்பதையும் நீக்கி விட்டார்கள். ஆங்கிலத்தை தாய் மொழியாக கொண்டவர்கள் தவிர ஏனையோர் தமது பாடங்களை ஆங்கில மொழியில் கற்கக் கூடாதென்று கட்டளை பிறப்பித்தனர். ஆங்கிலத்தை அறவே ஒதுக்குவதற்கான திட்டம் இது. அதன் சோக விளைவுதான் இன்று மாணவர்கள் புகலிடமின்றி ஊசலாடும் நிலையை அடைந்திருக்கின்றனர். ஏழாண்டு ஆங்கிலப் பயிற்சிக்குப் பதிலாக மூன்றாண்டு சாதாரண பயிற்சி கல்லூரி படிப்பிற்கு அவர்களை தயார் செய்ய இயலவில்லை. கல்லூரி பேராசிரியர்கள் அறிவை இழந்திடவில்லை, அதனை போதிக்க தயங்கவுமில்லை. ஆனால் மாணவர்கள்தான் பக்குவமடையவில்லை. கல்லூரி படிப்பிற்கான நூல்களும் இந்தியில் கிடையாது; போதனா மொழிக்கு வேண்டிய தகுதியும் இந்திக்கு இல்லை. பம்பாயில் கல்லூரி தலைவர் ஒருவர் தனது கல்லூரியிலுள்ள பேராசிரியர்கள் கொண்டிருக்கும் நியாயமான அச்சத்தைச் சுட்டிக் காட்டுகிறார். இந்த வேதனை தருகின்ற கொடுமைக்கு மாணவர்களல்ல பொறுப்பு; அரசாங்கமே காரணம். கல்லூரி நுழைவுத் தேர்வுகளில் கேள்விகள் மிகவும் எளிய ஆங்கிலத்தில் கேட்கப்பட்ட போதிலும், கல்லூரியில் சேர விரும்பியவர்களுள் 75 சதவீதத்திற்கு மேற்பட்டோர், அக்கேள்விகளை புரிந்து கொள்ள இயலவில்லை. இந்தி போதனா மொழியாக இருந்தபோது துருவி ஆராய்ந்து நுணுக்கமாக படிக்க தேவை ஏற்படாததால், அவர்கள் உயர்ந்த வகையில் பரீட்சைகளில் தேறிவிட முடிந்தது. இந்தியில் ஆராய்ச்சிக்கான கல்வி போதிக்க முடியாதென்ற காரணத்தால் அத்தகைய கல்வி ஒதுக்கப்பட்டிருந்தது. அதனாலேயே நுனிப்புல் மேய்ந்தவர்களுங்கூட வெற்றி பெற முடிந்தது என்று கருதலாம்.

கல்லூரியில் சேருகிறவர்கட்கு, அந்தந்த கல்லூரியின் விபரங்களடங்கிய அறிக்கை தரப்பட்டது. அந்த அறிக்கையைப் புரிந்து கொள்ளுகிற அளவிற்குக் கூட ஆங்கில அறிவு மாணவர்கட்கு இல்லை. இந்த உண்மை கல்வி நிபுணர்களாலும் தற்போது உணரப்பட்டிருக்கிறது. கணிதத்தற்கு சாதாரணமாக இலக்கிய அறிவு தேவைப்படுவதில்லை. ஆனாலும் கணிதத்தை ஆங்கிலத்தில் விளக்கும்போது அதை புது மாணவர்கள் புரிந்து கொள்ளும் நிலையிலில்லை என்று ஒரு கணிதப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதுகாறும் கல்வியை மாகாண போதனா மொழியில் கற்றிருப்பதாலும், பொதுப்படையான ஆங்கில அறிவு கூட பெறாத காரணத்தாலும், கணிதமும் விஞ்ஞானமும் கற்பிக்க இயலாதென திட்டவட்டமாக கூறியிருக்கிறார். கல்லூரிகளில் ஆங்கிலம் போதனா மொழியாக இருக்கக் கூடாதென்பதற்கு ஏற்ற காரணம் எதுவுமில்லை. அதன் உபயோகம் அடிமை தன்மையை உண்டாக்கி விடுகிறது என்று வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும், போதனா மொழிக்கு இருக்க வேண்டிய பண்புகள், பயன்தரக் கூடிய வசதிகள் ஆங்கிலத்திற்குத்தான் உண்டு. வேறு பண்படாத மொழிகளை பயன்படுத்துவதால் கல்வியின் தரம் தாழ்வாகப் போய்விடுவதோடு, கற்றவர்கள் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் புலமை பெறுவதும் கடினமாகிவிடும். ஆங்கிலேயர்கள் மருத்துவக் கல்விக்கு பெரிதும் இலத்தீன் சொற்களையே வழங்குகிறார்கள்; அங்ஙனம் வழங்குவதால் அவர்கள் தேசப்பற்று அற்றவர்களென்பதா முடிவு: இலத்தீன் மொழிச் சொற்களைப் பயன்படுத்தினால்தான் தக்க கருத்துக்களை தக்க முறையில் விளங்க வைக்க முடியுமென்பது அவர்கள் அறிந்து கொண்டதொன்று. மேலும் மருத்துவ அறிஞர்கள் ஒருவருக்கொருவர் தத்தம் சிந்தனைகளை பரிமாறிக் கொள்வதற்கு இலத்தீன் சொற்களை ஒதுக்காமல், கையாண்டு வருகின்றனர்.

பம்பாய் மாணவர்களுக்கு ஏற்பற்றிருக்கும் நிலையில் அவர்கள் ஆராய்ச்சிக்கான கருத்துக்களை எளிதில் வெளிப்படுத்த இயலாது; சுருக்கமாகச் சொன்னால் கல்லூரி கல்வி மேற்கொள்ள முடியாமல் அவர்கள் வாழ்க்கை பாழாக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழக ஆய்வுக்குழு உறுப்பினரும், கல்வி நிபுணருமான திரு எம். வி. தாந்தே, இனிமேல் பல்கலைக் கழகம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறதென்று வியப்போடும் அச்சத்தோடும் கேட்கிறார். இந்த மாற்றுவதற்காகாத பாதகத்திற்கு அரசாங்கத்தையே முழுவதுமாக குற்றஞ் சாட்டுகிறார். மனம் போன போக்கில் முன்னாலோசனையின்றி எவ்வித திட்டவட்டமான முறைகளையும் செவ்வனே வகுத்துக் கொள்ளாமல், அடிக்கடி திடீரென்று கல்வியின் போக்கை மாற்றிய வண்ணமிருப்பதாக அரசாங்கத்தை குற்றஞ் சாட்டி யுள்ளார். மாணவர்கள் கல்லூரிகளை முற்றுகையிட்டவாறு உள்ளனர்; கல்லூரித் தலைவர்கள் பின்னர் வரப் போகின்ற உபாதையை எண்ணி மாணவர்களின் கோரிக்கைகளுக்கு பதிலுரைக்க அஞ்சி யிருக்கின்றனர். கல்வி அரசியல் தலைவர்களின் விருப்பங்களுக்கு கட்டுப்படாதது: அதற்கான திட்டங்கள் கல்வி நிபுணர்களாலேயே நிர்ணயிக்கப்பட வேண்டுவது; ஆட்சியாளர் அநாவசியமாக தலையிடுவது பொருந்தாது என்பதும் தெளிவு.

உருட்சி!

குழந்தை பிறவாமையால், கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை நிகழ்வது இயற்கை.

நெடுநாட்களாக அல்லல் படபட்டு மடிவதைக் காணினும், நிம்மதியோடு சடுதியில் மாள்வதே சால்பு.

ஐக்கியத்திற்கு வழி, எதிரிகள் இருவரும் கூடிப் பேசித் தீர்த்தலே யாகும்.

பெண் என்பாள் வேர்- ஆண் என்பான் மரம். வேரானது எவ்வளவுக்கெவ்வளவு ஆழப் புதைந்தோடி அழுத்தமுறுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு மரமானது செழித்தோங்கி வளரும்.

பொற்றட்டிலிட்டுண்ணுலும், மட்டட்டிலிட்டுண்ணுலும் வயிற்றுணவு ஒன்றேதான். அஃதே போல் நவரத்தினக் கற்களிழைத்த பொற்கட்டிலில் லுறங்கினாலும், கட்டாந் தரையிற் கைவைத்துறங்கினாலும் உறக்கமும் ஒன்றேதான். உணவிலும் உறக்கத்திலும் வேற்றுமை ஏதுமில.

ஏழ்மையும், செல்வமும், மக்கள்பால் பிளவையுண்டுபண்ணி சண்டையில் ஆழ்த்துகின்றன. அவைகளைவிட அதிகமாக அறிவின் முதிர்ச்சியாலுண்டாகும் நுண்மாண் நுழை புலனியல்பால், பொறாமை, வெறுப்பு குரோதம், ஆகியவைகளை ஏற்கவேண்டி வருவதுமுண்டு.

வெற்றுப் பானைக்கு அறிவூட்டுவது மடமை!

—பேர்ள் பக் அம்மையார்

●

உருட்டு: 'டபிள்யூ'

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்விவரலாறு

திராவிடப்பித்தன்

22

ஆங்கில மோகம் பிடித்திருந்த வடவர்கட்குத் துணைபுரிவதுபோன்று பல நிகழ்ச்சிகள் இங்கிலாந்தில் நிகழ்ந்தன. சார்லஸ் கிராண்ட் என்பார் கிழக்கிந்திய கம்பெனியில் உத்தியோகத்தில் இருந்தவர். 1802-ல் பார்லிமெண்ட் அங்கத்தினராக வந்தார். இவர் 'இந்தியர்கள் குறிப்பாக இந்து இந்தியர்கள் அறியாமையால் கிடந்து உழலுகின்றார்கள். அவர்கட்கு முதலில் கல்வி அறிவுப் புகட்ட வேண்டும்.' என்று பிரசாரம் செய்தார். பெயர்பெற்ற தர்ம தாதாவாக விளங்கிய வில்பர் போர்ஸ் என்பாரை அணுகி இது சம்பந்தமாக பார்லிமெண்டில் ஒரு தீர்மானம் கொண்டுவரும்படித் தூண்டினர்.

இராஜாராம் மோகன்ராய்

இதற்காக ஆங்கில வாத்தியார்களையும் கிருஸ்துவ மிஷனரிப் பாதிரிமார்களையும் அதிக அளவில் இந்தியாவில் இறக்குமதி செய்வது நல்லது என்றும் கூறினர். அவரது தீர்மானத்தை கம்பெனி டைரக்டர்கள் உரத்த குரலில் ஆட்சேபித்தனர். பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் வில்பர் போர்சின் தீர்மானத்தை எதிர்த்தனர். மிஸ்டர் ரண்டல் ஜாக்ஸன் என்ற அங்கத்தினர் 'ஆங்கிலக் கல்வி முறையை இறக்குமதி செய்ததால்தான் நாம் அமெரிக்கக் காலனிகளை இழந்து விடும்படியாயிற்று. இதே தவறை இந்தியாவிலும் செய்ய வேண்டாம்.' என எச்சரித்தார். இந்த எச்சரிக்கையை சிறிது ஊன்றிப் பார்க்க வேண்டும். இந்திய நாடு சுதந்திரம் அடைந்துள்ளதானது ராண்டல் ஜாக்ஸன் அவர்கள் கூறிய ஆங்கிலக் கல்வி முறையால்தான் என்பதில் ஐயம் இருக்க முடியாது. இந்திய மக்கள் நவநாகரீகத்தையும், விஞ்ஞான உயர்வையும், உயர்தரக் கல்வியையும் ஏககாலத்தில் அடைந்து முடிவில் சுதந்திரமும் அடைவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது ஆங்கிலக் கல்விமுறை யல்லவா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் இப்போது என்ன சொல்கின்றார்கள் பாரத புத்திரர்கள்! ஆங்கிலக் கல்விமுறை இந்தியர் நாகரீகத்தைக் கொன்றுவிட்டது. இந்தியக் கல்வி முறையை ஒழித்துவிட்டது. இந்தியர்களை படுசூன்யங்களாக ஆக்கிவிட்டது. இந்திய மொழிகளை அழித்துவிட்டது. என்றெல்லாம் நாக்கூச்சமின்றிக் கூறுகின்றார்கள். சமஸ்கிருத மொழிக் கல்வி இந்திய நாட்டின் கல்வி முறையாக அமையாது போய்விட்டதே; இதற்கு மெக்காலே எமனாக வந்து சேர்ந்தானே என்ற வயிற்றெரிச்சலினால் இப்படியெல்லாம் பேசுகின்றார்களே தவிர அவர்தம் கூற்றில் துரும்பளவும் உண்மை இல்லை என்பது யாவரும் அறிந்ததே.

மேற்கூறிய சார்லஸ் கிராண்ட்; வில்பர்போர்ஸ் ஆகியோரின் கூற்றுகள் கவர்னர்ஜனரல் லார்ட் மின்டோ அவர்களின் 1811-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கடிதத்தால்உறுதிப்படுத்தப் பட்டது. "இந்தியர்களிடையே அறியாமை வளர்ந்து கொண்டே போகிறது. ஒரிரு கற்ற அறிவாளர்களும் மறைந்து போகக் கூடிய நிலையில் உள்ளனர்." இப்படியாக மின்டோ பாரத புத்திரர்களின் அறிவு சூன்ய நிலையை எடுத்துக் காட்டினர்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்தது போலவே மேலும் பல சமஸ்கிருத கல்லூரிகளும் மத்ரசாக்களும் நிறுவி "பாரத—முஸ்லிம்" ஒற்றுமையை வளர்க்க பாடு பட்டார்! கீழ உலக மொழி, கலை ஆகியவைகளிடம் காதல் கொண்டு வினைகள் புரிந்த வாரன் ஹேஸ்

கல்வி சீர்திருத்தம் பற்றி ராஜாராம் மோகன்ராய் தெளிவுரை

டிங்ஸ் மின்டோ போன்றோரால் அந்தக் காலத்திலேயே அவர்களாலும் அறிய முடியாதபடி, இந்துஸ்தானம் பாக்கிஸ்தானம் எனும் இரு பேரரசுகள் முளைத்தெழுவதற்கான விதை விதைகப் பட்டு வந்தது!!

1813-ம் ஆண்டு இந்திய கம்பெனியின் வாணிப சட்டம் பார்லிமெண்டாரால் புதுப்பிக்கப்பட்டது. இந்தியக் கல்வி வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய் கம்பெனி வருமானத்தினின்றும் செலவிடும்படி கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டது. இந்த ஒரு வட்சம் ரூபாய் தொகையும் "இந்திய அறிஞர்களை ஆதரிக்கவும் இலக்கியங்களை வளர்க்கவும் புதுப்பிக்கவும் பிரிட்டிஷ் இந்திய மக்களிடையே நவின விஞ்ஞான அறிவைப் புகுத்தி வளர்ச்சியடையச் செய்யவும்" செலவிடும்படி தீர்மானம் கூறியது இந்த தீர்மானந்தான் ஆங்கிலக் கல்வி வேண்டும் என்ற கோஷ்டியையும், ஆங்கிலக் கல்வி வேண்டாம் என்ற கோஷ்டியையும் சிருஷ்டித்து விட்டது.

மேற்கூறப்பட்ட ஒரு லட்சம் ரூபாயும் 1823-ம் ஆண்டு வரையில் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப் படாமலே இருந்துவந்தது. 1823-ம் ஆண்டு ஜூலையில் கவர்னர் ஜெனரல் 'பொதுநலக் கல்விக் கமிட்டி' ஒன்று நிறுவி வங்க மாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்கான காரியங்களைச் செய்துவருமாறு பணித்தார். இந்தக் கமிட்டி 10 அங்கத்தினர்களைக் கொண்டதாயிருந்தது. இவர்களில் பெரும்பாலோர் ஐரோப்பியர்களாக யிருந்தாலும் சமஸ்கிருத அரபு மொழி இலக்கியப் பிரியர்களாகவே இருந்தனர். இக்கமிட்டியினர் 1828-க்கும் 1833-க்கும் இடையே கல்கத்தா மத்ரசாவையும் காசி சமஸ்கிருத கல்லூரியையும் சீர்திருத்தி யமைத்தனர். 1824-ல் கல்கத்தாவில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரி நிறுவினர். ஆக்ராவிலும் டில்லியிலும் புதிதாக ஒரு சமஸ்கிருத கல்லூரிகள் நிறுவினர். பெரும் அளவில் சமஸ்கிருத அரபு புத்தகங்களை அச்சிட்டு குவித்தனர். ஆங்கில மொழியிலும் இந்து அரபு புளுகு புராணங்களை மொழி பெயர்த்து தம்மைச்சுற்றிலும் அடுக்கி வைத்தனர்.

இக்கமிட்டியின் இப்படிப்பட்ட செய்கைகளை வெறுத்த வங்க அறிஞர்கள் கண்டனக் குரலெழுப்பினர். கமிட்டியினரின் இப்படிப்பட்ட செய்கைகளால் மக்களின் அறிவு வளர்ச்சி பெருது என்பதை எடுத்துக்காட்டினர்.

ஆங்கில மொழிக் கல்வியைப் புகுத்தும்படி இங்கிலாந்தில் கிளர்ச்சி இருந்து வந்ததென்பதையும் அதேபோன்றே இந்தியாவிலும் ஒரு சாரார் ஆங்கிலக் கல்வியை விரும்பி கற்றுவந்தனர் என்பதையும் நாம் முன்பே கூறியுள்ளோம். மற்றும் மக்களின் பொதுஅறிவும் கல்வி முறையை இந்தியர்களிடையே பரப்ப விரும்பினர் மக்களின் அறிவு வளர்ச்சியில் அக்கரைக் கொண்டிருந்த நல்லறிவாளர். இப்படி மக்கள் நலனில் அக்கரை கொண்டவர்களில் தலைசிறந்து விளங்கிடவர் இராஜாராம் மோகன்ராய் அவர்களாகும். பிராமணராலும் ராஜாராம் மோகன்ராய் பெரும் சீர்திருத்தக்காரர் பகுத்தறிவுவாதி. புதுமையை ஏற்று அறிவை வளரச் செய்யும் எண்ணங் கொண்டவர். ஆரிய விஷத்தை சுட்டுப் பொசுக்கும் எண்ணமுடன் 'பிரம்ம சமாஜம்' என்ற பகுத்தறிவு சங்கம் கண்டவர். பெண்களை உயிருடன் கொலை செய்யும் ஆரியரின் அநாகரிகச் செயலாம் சதி எனும் கொடிய வழக்கத்தை ஒழிக்க பாடுபட்டு வெற்றிவாகை சூடியவர். வேதியர்களின் அறிவு சூன்யத்தை அகிலம் அனைத்தும் அறியச் செய்தவர். சமஸ்கிருத ஆதிக்கம் மக்களின் அறிவு சூன்யத்தை வளர்க்குமேயன்றி அறிவு வளர்ச்சியைத் தராது எனும் உண்மையை யாவரும் அறியச் செய்தவர். அரபு சமஸ்கிருத மோகங் கொண்டலைந்த சில ஆங்கிலேயர்களை கண்டித்து அறிவு புகட்டியவர். அறிவு சூன்யமே நிரம்பிய ஆரியரிடையே சாவதைக் காட்டிலும் நல்லறிவாளர்கள் நிரம்பிய ஆங்கிலேயர் நாட்டில் சாவதேமேல் என எண்ணி இங்கிலாந்து சென்று இறுதி நாட்களைக் கழித்தவர்,

இப்படிப் பட்ட முற்போக்கு வாதியான ராஜாராம் மோகன்ராய் அவர்கள் வங்கசர்க்கார் கல்கத்தாவில் சமஸ்கிருத கல்லூரி ஒன்றை நிறுவத் தொடங்கிய போது, இப்படிப்பட்டக் கல்லூரிகள் கட்டுவதால் மக்களுக்கு பயன் ஒன்றும் கிட்டாது என எடுத்துக்கூறி தனது கண்டனத்தை கவர்னர் ஜெனரல் லார்ட் ஆர்ம்ஹர்ஸ்ட் அவர்களுக்கு எடுத்துக் கூறியதில் வியப்பில்லையன்றோ! "இதைவிடச் சிறந்ததும் அறிவுடையதுமான ஒரு கல்வி பயிற்சி முறையை துவங்க வேண்டும். மக்களின் அறிவு வளர்ச்சிக்கான விஞ்ஞானக் கல்வி புகட்டப் படவேண்டும். சிறந்த சாதனங்களும், சிறந்த அறிவு வளர்க்கும் நூல்களும், சிறந்த ஆசிரியர்களும் கொண்ட கல்லூரிகள் நிறுவப்பட வேண்டும்" என கவர்னர் ஜெனரலுக்கு அறிவுறுத்தினர்.

"இளம் மாணவர்களின் மனதில் சமஸ்கிருத இலக்கண சட்ட திட்டங்களையும் வியாகர்ணதத்துவத்தின் அழுக்குகளையும் நிரப்புவதால் அவர்களுக்கோ அல்லது அவர்கள் தொண்டாற்றப் போகும் சமுதாயத்திற்கோ யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை. பிரிட்டிஷ் சமுதாயத்தினரை அறியாமையிலேயே ஆழ்த்திவைத்திருக்க நீங்கள் விரும்பியிருந்தால் பேக்கன் போன்றோரின் உயர்ந்ததத்துவ அறிவுகளை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டீர்கள். அதே போன்று இந்திய சமுதாயத்தினரை அறியாமையில் ஆழ்த்தி வைத்திருக்க விரும்பினால் சமஸ்கிருத கல்வி முறையை விட வேறு சிறந்த கல்வி முறை உங்களுக்குக் கிடைக்காது;" என்று சமஸ்கிருத மொழிக் கல்வியின் பண்ணுடை முறையை ஒவ்வொருவரும் உணர்ந்து நல்லது செய்யும்படி அறிவுறுத்தினர். ஆங்கில இலக்கியங்களையும் விஞ்ஞான நூல்களையும் கற்று முற்போக்கு அடைய வேண்டும் என்றும், பழைய பத்தாம் பசலி சமஸ்கிருதத்தையும் புராணக் குப்பைகளையும் ஒதுக்கித் தள்ள வேண்டு மென்றும் மக்களுக்கு எடுத்துக் கூறினர். சொல்லளவில் நின்று விடாது செயலிலும் தம் கருத்தை நிறைவேற்றிக் காண்பித்தார்.

ராஜாராம் மோகன் ராய் தமது சொந்த செலவிலேயே ஒரு பள்ளியை நிறுவி மக்களின் கல்வி வளர்ச்சிக்கான திட்டத்தை அமுல் நடத்திக் காட்டினர். கல்கத்தாவில் இவரது முயற்சியால் "இந்து காலேஜ்" என்ற பெயரில் ஒரு கல்லூரி 1817-ம் ஆண்டு ஜனவரி 20-ந் தேதி நிறுவப் பட்டது. டேவிட்ஹரே, சர் அட்வர்ட் ஹைட் ஈஸ்ட் ஆகிய இருவரும் இக் கல்லூரி நிறுவுவதில் ராயுடன் ஒத்துழைத்தனர். இக்கல்லூரியில் ஆங்கில விஞ்ஞான பாடங்கள், இலக்கியங்கள், புதிய தத்துவக்கொள்கைகள் தேச சரித்திரங்கள், வான சாஸ்திரி கண்டுபிடிப்புகள், வங்க மொழி இலக்கியங்கள் பொதுஅறிவு பாடங்கள், ஆகியவைகள் பாடங்களாக அமைந்தன. ஆங்கில மொழியே போதனா மொழியாக இருந்து வந்தது ஆங்கிலமொழிக் கல்வியே இந்தியர்களின் அறிவை உயரச் செய்யும் என்பதோடு இந்தியர்களின் சமூக நிலையையும் உயர்வடையச் செய்யும் என்ற திட எண்ணத்துடன் இக்கல்லூரியைத் துவக்கினர் ராஜாராம் மோஹன்ராய். முஸ்லிம் இந்து கீழ்ச்சாதி மேல்சாதி என்ற வித்தியாசமின்றி இக்கல்லூரி நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கதாகும். இக்கல்லூரியே கல்கத்தா பிரிசிடென்சி காலேஜ் துவக்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது என்பது குறிப்பிடக்கூடியதாகும்.

ராஜாராம் மோகன்ராயின் அறிவுரையையும் செய்கையையு மக்கள் ஒப்பினர். ஆதரவும் நல்கினர். பிரசன்ன குமார் டாகூர் போன்ற அறிஞர்கள் ராய்க்கு பக்கபலமாகநின்றனர். ஐரோப்பிய பாதிரிமார்களால் நடத்தப்பட்டு வந்த ஆங்கிலப் பள்ளிகளில் தம் பிள்ளைகளைச் சேர்த்து ஆங்கிலக் கல்வி வளரச் செய்தனர்.

மக்களின் அறிவு வளர்ச்சியிலும் சமுதாயத்தின் முன்னேற்றத்திலும் அக்கரை கொண்டு அறிஞர் பலரால் செயலாற்றப்பட்டு வந்த இப்படிப்பட்ட நேரத்தில்தான் லார்டு பென்டிங் அவர்கள் கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றதும் லார்டு மெக்காலே அவர்கள் இந்திய சர்க்கார் நிர்வாகக் குழு அங்கத்தினராக நியமிக்கப்பட்டதுமாகும். லார்டு பெண்டிங், லார்டு மெக்காலே இருவரும் மக்களின் விருப்பமறிந்து இந்தியக் கல்வி முறையை செப்பனிட்ட வரலாற்றை அடுத்த வாரம் ஆராய்ந்து பார்ப்போம்,

—தொடரும்



நினைவு அலையில் !

கையில் சிக்கிய பைங்கிளியை—ஆசைச் சிறையிலே பாலத்துவாசி அடைக்க நினைத்தான். தங்க மேனியாளோ அங்கமெலாம் நொந்துபோய் தத்துவம் பேசிக் கொண்டிருந்தாள். இதோ கீழே புது அலைகள்...!

*

39

“பூத்துச் சிரிக்கும் புது மலரே! நீ வேண்டாம். உன் தேன் வேண்டுமென்று கூறும் புது வண்டே......உடல்தானே வேண்டும்—உடல். புலித்தோல் விரும்பும் புத்தசந்நியாசி அகிம்சையின் லட்சணத்தை எண்ணிப் பார்ப்பதில்லையே! புலி செத்தாலும் பரவாயில்லை—எனக்கு வேண்டியது புலித்தோல் தானென்று புன்னகை பூத்துக் கூறும் போலிவேடதாரிக்கும் உனக்கும் வேறுபாடே இல்லைதான். நான் செத்தாலும் ...என் லட்சியங்கள் சிதைக்கப் பட்டாலும் நீ விரும்புவது என் உடலைத்தான். நீதியின் லட்சணத்தைப்பற்றி நீ எங்கே அறிந்திருக்கப் போகிறாய். ஓநாய்க்குத் தெரியுமா ஒய்ந்து படுத்திருப்பவன் நிலை!”

நான் ஓநாயல்ல...உன் வாழ்வின் ஒய்யாரன். உன் அகன்ற கண்களிலிருந்து புறப்படும் அம்புகளையே என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை இந்த நிலையிலே சொல்லம்பு வேறு தொடுக்கிறாயே! ஆசையாகப் பேசு! நீ சிரித்தால் குழிவிழுமாமே...அந்த அற்புதச் சிரிப்பை முழக்கிக் காட்டு! விரிந்து குவியும் தாமரை அதரங்களிலே தேன் ஒட்டிக் கிடக்குமாமே......அதையுந் தான் எனக்குக் காட்டேன். இந்தச் சின்னஞ்சிறு அறையிலே நீயும் நானும் தானே யிருக்கிறோம். வெட்கம் ஒரு விளையாட்டுக் குழந்தை! அதன் குறும்பை அடக்கிவிட்டு நீ வா...!

அழுகும் உடலை விரும்பும் அழிவுக்காரனே. இவ்வளவு நேரமாக நான் சொல்லும் நல்ல உரைகள் உன் இதயத்தைத் தொடவில்லையே! கொடும்புலியாக இருந்திருந்தால் என்னை நீ கடிக்காமலே விட்டிருப்பாய். கடும் விஷம் கக்கும் நாகமாக யிருந்திருந்தால் கொத்தாமலே போயிருப்பாய்... என் இரக்கமொழிகளைக் கேட்டு! ஆனால் நீ மனிதனாக யிருந்தும் மிருகங்களுக்கும் கீழாகி விட்டாயே! அழகான சித்திரத்தை அழித்துத்தான் தீருவேனென்று நீ துடிதுடிக்கும் போது நான் தடுத்துத்தான் என்ன பயன். இன்பச் சோலைக்குள்ளே இரும்புக் கால்கள் அடிஎடுத்து வைத்து விட்டன. விளைவு......வேதனை தானே! வட்டமிடுங் கழுகே! இந்தப் பிண உடலைக் கொத்தவா! இனி நான் வாழ்ந்தாலும், இறந்தாலும் பிணமேதான்...இந்த நிலையிலேயே நீ பூஜிக்கிறாயா... புழுதி வாரித் தூற்றுகிறாயோ யென்று நினைக்கவே நேரமில்லை.

ஆகவே இந்த உடலை, உயிரை, ரத்தத்தை...எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள். தடாகத்தைப் பிரிந்த தாமரை எங்கிருந்தாலென்ன? எழிலரசியின் கூந்தலிலே யிருந்தாலும்—எருமையின் காலடியிலே சிக்கினாலும்—தாமரைக்கு வாழ்வேது—சுகமேது? வாழவைக்க முடியாத சமுதாயத்தில் — உன்னைப் போன்றவர்களால் சாக வைக்கவாவது முடிகிறதே! அதுவேபோதும். துயர்ப்படுவோருக்குத் தூக்குக் கயிறும் துன்மார்க்கனே, உன் ஆசைக் கயிற்றை இறுக்கு!

....

ஆத்திரத்தோடு பேசி முடித்த வனஜா சுவரோடு சாய்ந்திருந்தாள். தளர்ந்து போயிருந்த அவளின் கரங்களைத் தாங்கிப் பிடித்துக் கொண்டே கால்களை முன்னே நகர்த்தி வைத்தான் பாலத்து வாசி......!

குளிர்காற்று வீசியடித்தது. வனஜாவின் ஆடைகள் சரிந்து கிடந்தன, உள்ளமும், உடலும் சூடாகிக் கிடந்த பாலத்து வாசியை குளிர் காற்று அணைத்து வைக்கவில்லை. சூழ்நிலை புதுச் சூட்டைத் தந்து கொண்டேயிருந்தது. தவசிரேஷ்டரின் முன்னே நின்ற மோகனாங்கி மேனகையைப் பார்த்ததும் தன் நிலை, மறந்து தவக்கோலம் பிரிந்து ஆடும் மயிலோடு ஆடி ஒரு வகை வெறி கொண்டாரே விசுவமுனி...அது போன்றதோர் வெறிக்குத்தான் பாலத்து வாசியும் ஆளாகியிருந்தான். பளிங்குக் கல்லிலே செதுக்கப்பட்டது போன்றிருந்த ஒட்டிய புஜங்களிலே பாவ நெஞ்சன் விரல்களைப் பதித்தான்.

...தொடாதே! என்ற குரல் அவனது தலையிலே சம்மட்டிஅடியைப்போல விழுந்தது. கதவைத் திறந்து கொண்டு குள்ள உருவத்தினன் உள்ளே நுழைந்தான் கண்ணீர் சொட்டும் முகத்தோடு பாலத்துவாசியின் அருகே வந்து நின்றான். வனஜாவின் இதயத்திலே நம்பிக்கை நட்சத்திரம் மின்னத் துவங்கியது, மத்தளம்போல சத்தம் எழுப்பிக் கொண்டிருந்த நெஞ்சத்தைத் தாங்கிக் கொண்டே...

ஏனடா, என்ன சொல்லுகிறாய் என்று கத்தினான் பாலத்து வாசி வெறி பிடித்தவனைப்போல!

தொடாதே! விட்டுவிடு அந்தப் பெண்ணழகியை. என் கல்நெஞ்சுகூட இளகிவிட்டது. கதவுக்கு வெளியே யிருந்த இந்தக் கல்நெஞ்சனைக்கூட அந்தக் கனிமொழிகள் மனிதனாக்கி விட்டதே! நீ ஏன் இன்னும் வேதனைப் பாம்புக்கு மகுடி ஊதுகிறாய்? கெடுத்தது போதும் அந்தப் பூங்கொடியை! சாவுக் குரல் கொடுக்கிறாள் இந்தச் சத்தியவதி, வழிவிடு...வாழ்வு தருவோம்.

முட்டாளே! நீ வேறு புதிய தொல்லையா? போய் விடடா! கூலிக்குத்தான் உனைப் பிடித்தேன் என் இன்ப வாழ்வின் முன்னே வேலிபோட அல்ல.

கூலிக்கு வந்தவன்தான் அதற்காக நீ கூர்வாளை மார்பிலே நீட்டினாலும் தாங்கிக்கொள்ளவேண்டுமா? நான்தான் கூறுகிறேனே உன்னிடம் கூலிக்கு பேரம்பேசிய நேரத்திலே மனித நெஞ்சு இல்லையே என்னிடம். அதனால்தான் நீ வீசிய சூழ்ச்சிவலையிலே நானும் ஒரு கைபிடித்தேன். இப்போது அக்ரமக் குட்டையிலே கிடந்த எனக்கு அறிவுக் கண்களை அன்புப் பேச்சுகள் திறந்து விட்டன. உன்னைப்போல காலந்தந்த கறுப்புக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு இனியும் இருண்ட உலகத்தைக் காணவே மாட்டேன் ஆதிக்க மேகமே...அந்த நீல நிலவை விடுதலை செய்!

“கோல மயிலின் ஆட்டத்தைக் காண முடியாத குருடனே! சுக போகத்தை அனுபவித்துத் தீர்த்து விட்டுத்தானே—சித்தார்த்தன் காடேகினான், இந்த சுந்தரச் சோலைக்குள்ளே என்ன யிருக்கிறதென்று பார்த்துச் சுவைத்து விட்டு நானும் விட்டுவிடுகிறேன் புத்தனாகி விடுகிறேன். ஆசையின் கடைசி எல்லைக் கோட்டிலே தானே...தத்துவங்கள், போதனைகள் உருவாகித் தீரவேண்டும் இது எனது அசைக்க முடியாத லட்சியம். இந்த லட்சியத்தை யார் எதிர்த்தாலும் தூள்தூளாக்குவேன் என் நெஞ்சக் கொள்கையின் எதிரிகளை!”

‘அதையுந்தான்—பார்ப்போம்’ என்று கூறிக் கொண்டே குள்ள உருவத்தினன் பாலத்துவாசியின் மீது பாய்ந்தான். வனஜாவை விட்டு குள்ளஉருவத்தை நோக்கி வெறிநாயைப் போல பாலத்து வாசி நகர்ந்தான்.

அந்த இருவரும் கோதாவிலே வெற்றியைக் காணத் துடிக்கும் மல்யுத்த வீரர்களைப்போல ஆவேசத்தோடு போராடிக் கொண்டிருந்தனர்.

அந்த நல்ல நிலையைச் சாதகமாக்கிக் கொண்ட வனஜா பதுங்கிப்பதுங்கி நகர்ந்து கதவை ஓசைபடாமல் திறந்து கொண்டே வெளியே அடி எடுத்து வைத்தாள். வேதனைக் கூண்டின் கதவுகளைத் திறந்து கொண்டு வந்தது போல யிருந்தது வனஜாவுக்கு. விடி வெள்ளிகள் வானத்திலே மின்னின. அதைப் பார்த்துக் கொண்டே ஏக்கத்தோடு நடைபோட்டாள்,

(தொடர்கதை)

கன்னிவாடி (தாரை வட்டம்)

16—7—55 மாலை 5 மணிக்கு தாராபுரம் வட்ட தி. மு. க.வின் சார்பில் மும்முனைப் போராட்ட நினைவுநாள் கொண்டாடப்பட்டது. அன்று மாலை 50 சைக்கிள்கள்கொண்ட ஊர்வலத்திற்கு கன்னிவாடி கிளை தி. மு. க. செயலாளர் தோழர் என். சண்முகம் தலைமையில் உரிமை முழக்கத்துடன் பொதுக்கூட்ட மைதானத்திற்கு வந்தடைந்தது. கோதை. பொன்னப்பாவின் இயக்கப் பாடல்களுக்குப்பின் கன்னிவாடி பெரியார் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப் பட்டது, தலைவரின் முன்னுரைக்குப் பின் வட்டக்குழு செயலாளர் தோழர் ந. சின்னமுத்துசாமி, கண்ணுசாமி, கோதை. பொன்னப்பா ஆகியோர் மும்முனைப் போராட்ட நினைவு நாள் குறித்து விளக்கமாகவும் விரிவாகவும் சொற்பொழிவாற்றினார்கள். பின்பு தலைவர்முடிவுரைக்குப்பின் செயலாளர் என். சண்முகம் நன்றிகூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

Tel : WIND. Phone : 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்,

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ் : 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஒட்டல், மதுரை
" 103-1/127- பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

செய்திகள்

இலங்கை

இலங்கை தி. மு. கழகம் கொழும்பு கிளையின் செயலாளர்கள் தேர்தல்

தோழர் எம் முக்தார் செயலாளராக வும், துணைச்செயலாளராக தோழர். வி. எஸ் முருகன் அவர்களும் ஏகமன தாக தெரிவு செய்யப்பட்டனர், கொழும்பு கிளையின் தெற்குக் குழு கூட்டம் ஞாயிற்றுகிழமை (10-7-55) 4-மணியளவில் தோழர் எம். ஐ. இராச மணி தலைமையில் நடைபெற்றது. இதுவரை செயலாளராக பிருந்து பணியாற்றிய தோழர் பி. தம்பித்துரை தாயகம் செல்வதை முன்னிட்டு. அவர் சமர்ப்பித்த விலகல்கடிதம் ஏற்கப்பட்டு, செயலாளர் தெரிவு நடைபெற்றது! அவ்வமயம், துணைச்செயலாளராக பணியாற்றிய தோழர் எம் முக்தார், செயலாளராக தெரிவு செய்யப்பட்டார், துணைச்செயலாளராக தோழர் வி. எஸ் முருகன், ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். செயற்குழுஉறுப்பினர் களாக தோழர்கள் ஏ. ஜார்ஜ் சிங்களத் தோழர் சி. தலுவத்த தோழர். ஜேம்ஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கை தி. மு. கழக, பொதுக் குழுவிற்கு கொழும்பு கிளையின் சார் பில் தோழர். ஈா. பழனிநாதன், க. ஆறுமுகம் ஆகியோர் நியமிக்கப் பட்டனர், செயற்குழுவிற்கு ஒழுங்காக கலந்து கொள்ளத்தவறியதால் தோழர் கள் ஏ. ஆர். கே. சாமி, க. ஆதித்தன் ஆகியோர்களை செயற் குழு விலிருந்து விலக்குவதென செயற்குழு தீர்மானித் தது! மற்றும் பல தீர்மானங்கள் நிறை வேறின! செயலாளர்கள் தெரிவு செய்து வைக்கப்பட்டபின் தோழர் பி. தம்பித் துரை சொற்பொழிவு நிகழ்த்தினர். செயற்குழு உறுப்பினர்கள் செயற் குழு விற்கு அளிக்க வேண்டிய ஒத் துழைப்பைப் பற்றியும் எடுத்துக்கூறி னர், தலைவர் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது!

முத்தமிழ் மன்றம்

75/4 சிந்தும்பிட்டித் தெருவிலுள்ள முத்தமிழ் மன்றத்தின் மாதாந்தர செயற்குழுக்கூட்டம் மன்றப் பணிமனை யில் ஜெ. சோமசுந்தரம் அவர்கள் தலை மையில் 9—7—55-ல் இரவு 7 மணிக்கு கூடியது. அவ்வமயம் மன்றத்தின ஆக்க வேலைகளைக் குறித்து பல தீர்மா னங்களும், இலங்கை அரசாங்கம் தமி ழுக்கு சரிநிகர் அந்தஸ்து அளிக்க வேண்டுமென்ற தீர்மானமும் நிறை வேற்றப்பட்டது. இதுகாறும் துணைச் செயலாளராக பணிபுரிந்த தோழர் தி. இளங்கதிர் தன் தொழிலின் நிமித்தம் பதவியிலிருந்து விலகியதால் அந்த பதவிக்கு தோழர் எல். தர்மதாசன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதியில் புதிய துணைச்செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

*

சென்னை 12-வது வட்ட தி. மு. க.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளரால் துணைப்பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கும் தோழர் என். வி. நடராசனர் அவர்களை 12-வது வட்ட தி மு. கழகம் பாராட் டுவதுடன் தன்னுடைய மகிழ்ச்சியை யும் தெரிவித்துக் கொள்கிறது என்று 15-7-55-ல் கூடிய கமிட்டிக் கூட்டத் தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜூலை 15 மும்முனைப் போராட்ட நினைவு நாளினை ஒட்டி கழகக் காரியா லயத்தில் கொடி ஏற்றியும் அலுவல கத்தை வர்ண விளக்குகளால் அலங்கரித் தும் சுவரொட்டிகள் எழுதியும்கூட்டம் நடத்தப்பட்டது. பொது மக்களுக்கு இனிப்புப்பண்டம் வழங்கப்பட்டது.

வள்ளுவர் படிப்பகம்

3—7—55 ஞாயிறுமாலை 4 மணிக்கு சென்னை பெரம்பூர் தெ. இ. பௌத்த நிலையத்தில் வள்ளுவர் படிப்பகத்தின் திறப்புவிழாக் கூட்டம் திரு ஏ. கே. சாமி அவர்கள் தலைமையில் நடைபெற் றது. வள்ளுவர் படிப்பகத்தை திரு எஸ். பிரான்சிஸ் அவர்கள் திறந்து வைத்தார். தோழர்கள் விருதை ந. இராமசாமி கோ. வி. மணிசேகரன் ஆகி யோர் படிப்பக வளர்ச்சி குறித்து சொற்பொழிவாற்றினர்கள். படிப்பகச் செயலாளர் தோ. கி சீனிவாசன் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

சென்னை 8-வது வட்டம்

19—6—55 அன்று நடைபெற்ற 8-வது வட்ட திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகத் தேர்தலில் தோழர் மு. ப. புட் பரத்தினம் பொதுச்செயலாளராகவும் தோழர் ம. வ சிவபூஷணம் துணைச் செயலாளராகவும், தோழர் மு. நடரா சன் பொருளாளராகவும் பதினல்வர் (14) செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாயூரத்தில் திருமணம்

7—7—55 வியாழன் காலை மாயூரம் 3-ம் நெம்பர் புதுத்தெருவில் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் சிறை சென்ற தி மு.க. தோழர் ப.கோவிந்த சாமி அவர்களுக்கும் கீழூர் தோழியர் லட்சுமி ஆயாளுக்கும் மேற்படி தோழரின் சகோதரியார் தோழியர் செகதாம்பாள் ஆயாளுக்கும் கீழூர் தோழர் ப. சுப்பையா அவர்களுக்கும் மாயூரம் தோழர் து. காசிநாதன் அவர் கள் தலைமையில் சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது. மணமக் களைப் பாராட்டி, தோழர்கள் ஜி. பக் கிரிசாமி, எஸ். நாராயணசாமி எம். சி. ஜி நாராயணசாமி எம் எல் ஏ, ஆகி யோர் வாழ்த்துரை வழங்கினர். தோழர் கள் பலரால் பரிசுகள் வழங்கப்பட்டு திருமணம் சிறப்புற முடிவுற்றது. அதன் நினைவாக 'திராவிடன்' வளர்ச் சிக்கு ரூபாய் 2 நன்கொடை அளிக்கப் பட்டது. நன்றி—நிர்வாகி.

சமாதானப் பரிசு!

●

மகன் : அப்பா! நேருபாத்தியாப்பா! நன்னு கொழுத்துட்டாரு! இல் லேப்பா!

தந்தை : சில படங்களில் அப்படித் தான் அவர் பருமனு தோணுவாரு! இருந்தாலும் அவர் உடம்பிலே இந்த அஞ்சாறு வாரமா பலநாட்டு, பலஊர் தண்ணி ஊறில்லையா! அதனலே ஒரு வேளை பருத்து தோணுவாரு! இல் லாட்டா 25000 மைல் சுற்றுப் பிரயா ணத்திலே பல கோடி மக்களின் ஆரவா ரத்தையும், அமோக வரவேற்பையும் கண்டாரே அதனலே பூரித்துப் பூத்தி ருப்பார்! பூரிப்பினலேயும் உடல் பருக் கலாமல்லவா!

ம : அவர் இனியேல் 'பாரதரத்ன' நேருதானேப்பா!

த : ஆமாம்! ஆமாம்! நம் இந்தியா விலேயே அந்தப் பட்டம்தான் உச்சி யில் உயர்த்தி வைத்திருக்கிற பட்டம். அப்பட்டத்தைத்தான் நம்ம ஜனதிபதி இராசேந்திர பிரசாத் ஜூருக்காரோ இல்லையோ, அவர் நேரு மீது கொண்ட அமோக பிரேமையால் அளித்தாரு!

ம : பட்டமெல்லாம் கூடாது!உயர்வு தாழ்வு கூடாது! சுதந்திரத்திற்குப் பிறகு எல்லோரும் சமம்! எல்லாரும் இந்நாட்டு மன்னர்! எனவே வெள்ளைக் காரன் கொடுத்த பட்டத்தை எல்லாம் விட்டுடணும் என்றெல்லாம் சொல்லி விட்டு, இப்போ என்னப்பா பட்டம்!

த : அதுவா! அது பழைய கதை! முன்னே நம்ப இசைவாணி சுப்புலட் சுமிக்குக் கூட 'பத்ம விபூஷணம்' பஹ் லாவா, தூஸ்ராவர், தீஸ்ராவா என் பதைகூட மறந்துட்டேன். அப்போவே சொன்னேனே......

ம : ஆமாப்பா ஞாபகத்துக்கு வருது! மாமியார் உடைச்சா மண்குடம், மாட்டு பொண்ணு உடைச்சா பொன்குடம்! சரிப்பா...! நேரு ரோஷக்காருன்னு சொல்வாங்களே! அவரு இந்தப்பட்டம் வாணண்ணு சொல்லிட்டா!

த : அப்படி யெல்லாம் சொல்லமாட் டார். ஏன்னு கேட்டா...! இப்போ பட்டங் கொடுத்தவரு பழுத்த பழைய தேசத் தியாகி பிரசாத்! பட்டம் வேணண்ணு நம்பிரசாத் தாத்தாவுக்கு அவமானமில்லையா! நேருவுக்கு பிரசாத் ஜீயிடம் ரொம்ப மதிப்பு! பட்டத்தை பத்திரமா, நேரு தம் பேருகூட ஒட்ட வைத்துக் கொள்ளுவாரு!

ம : ஆமாம்! இந்தப்பட்டம் இப்போ நேருவுக்கு கொடுத்தது, பல நாடுகளுக் குப்போய், சமத்தா, ஊடு வந்து சேர்ந் தாரேன்னுதானே!

த : அதற்கு மட்டுமில்லே! உலகத் துக்கே சமாதானத்தைத் தழைக்க வைக் கணும்னு, 'பஞ்சசீலத்தை' இரும்புத் திரை நாடான உருஷ்யாவையே ஒப்பும் படி செய்தாரோ இல்லையோ அதற்காக கூட!

ம : ஏம்பா! அப்போ அவருக்கு சமா தானத்துக்காக நோபல் பரிசு கொடுக் கக் கூடாதா!

த : அதைக் கொடுக்க வேண்டியவர் கள் கவனித்தால் கொடுப்பார்கள்!

ம : 'பாரத் ரத்ன' வைக் கண்டா கொடுப்பாங்களா!

த : கொடுத்தாலுங் கொடுக்கலாம்! யார் கண்டா!

டபிள்யூ பி. டி. எழிலன்

●

தமிழர் என்றும்!

சா. இராமாநுசம், இரட்டணை

*

வந்தாரை வரவேற்ற வண்டமிழ் நாடே
வாழ்வற்றுர் உன் மக்கள் ஏனோ இன்று
சிந்தாத மணிக்கதிராய் சேர்ந்தே வாழ்ந்தோர்
சிந்திவிட்டார் உலகெங்கும் சிதறித் தமிழர்
பந்தாகப் போய்விட்ட தமிழர் வாழ்வும்
பாட்டாளி நிலைதானே? பாரில் எங்கும்
தந்தாக வேண்டும் தரணி யெங்கும்
தாழ்வுற்ற நிலைதானே? தமிழர் என்றும்!

புலியாக வாழ்ந்தார்கள் புதுமைப் பெற்று
புவியெல்லாம் போற்றிடவே வாழ்ந்தோர் இன்று
எலியாக வாழ்கின்றுர் ஏனோ இந்த
இழிநிலையைப் பெற்றுர் எண்ணிப் பாராய்
சலியாத உழைப்பாளர் தமிழர் என்றும்
சரியாத குன்றாக வாழ்வும் பெற்று
வலியாராய் வாழ்ந்தார்கள் வளமாய் என்றே
வரையாரோ வரலாற்றில் தமிழர் என்றும்!

வில்லேந்தி நின்றிட்டான் வீரத் தமிழன்
வீரிட்டு அலறினவே காட்டு மிருகம்
மல்யுத்தம் செய்கின்ற தமிழன் கண்டால்
மாற்றுரும் மனம் நடுங்கி மடிவர் என்ற
சொல்லுக்கு இலக்காக நின்றத் தமிழன்
சோர்ந்தானே சோகத்தின் உருவாய்த்தானும்
எல்லைக்கும் மீறிவிட்ட இன்னல் பெற்று
ஏற்றுத் தவிப்பாரோ தமிழர் என்றும்!

உலகத்து மக்களே ஒருசொல் கேளீர்!
ஒப்பற்ற தமிழனுயர் எண்ணம் காணீர்
உலகத்து மக்களெலாம் ஒன்றாய்க் கூடி
ஒரு குலமாய் வாழ்ந்திடவே வேண்டும் என்ற
பலமுற்ற லட்சியத்தை நெஞ்சில் கொண்ட
பண்புள்ள தமிழனவன் என்றே அறிவீர்!
கலகத்தை விட்டொழித்து வந்தால் நின்று
கட்டாயம் ஒத்துழைப்பான் தமிழன் என்றும்!

கால் ஆணிக்கு மேல் பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்து ஆணியைப்போல் ஏற்பட்டு நடக்கும்போது பாத மானது தரையில் வைக்கமுடியாமலும் கல் பட்டால் துடிதுடிப் பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக் கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ 2-8-0 தபால் சார்ஜ இனம்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்
வியாசர்பாடி சென்னை-12

இலக்கியச் சோலை

மனமே நீயே குற்றவாளி!

சங்க கால பைந்தமிழரின் இதயத் தொட்டிலில் வீரமும் காதலும் துள்ளி விளையாடின. வீர விளையாட்டுகளில் ஈடுபட்டோருக்கு காதலெதற்கு என்ற மனப்பண்பு வளரவில்லை. சிலம்பக் கூடம்· மற்போர் மேடை, வாட்பயிற்சி மனை—ஆகியவற்றில் மனம் இலயித்தவர்க்கு இன்பவல்லிகளின் இதய கீதத்தைக் கேட்க நேரமேது என்ற நிலைமை தோன்றவில்லை. காதலும் வீரமும் பிணைந்து அவர்களது வாழ்வில் களி நடம் பயின்றன. அகம் என்பது காதலையும் இல்லறத்தையும் தழுவியது; புறம் என்பது வீரத்தின் அடிப்படையில் எழுந்தது. அகத்துறையில் ஈடுபட்டோர் புறத்துறையை அகற்றிடவில்லை; புறத்துறையில் உழல்வோர் அகத்துறையின் வனப்பை துறந்திடவுமில்லை.

போர் முரசம் முழங்கியதும் தனது இதயராணியின் இயற்கையான ஒப்புதல் மொழிபெற்று அமர்க்களம் புகுந்த கட்டிளங்காளைகளின் வரலாறு பலப்பல. போர் முடிந்த பின்னர், இல்லமும் இன்பமும் மீண்டும் மலர்ந்தன "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை"—இல்வாழ்க்கையின் முழு முதல் இலக்கணம் இது. இவ்விலக்கணத்திற்கு மாசற்ற சான்று சங்ககாலப் பெருங்குடி மக்கள். அறந்தழைப்பது இல்வாழ்க்கையின் நோக்கம் என்றால் அறத்தோடு இயைந்த போர் தவிர்க்க முடியாத நாட்டுக் கடமையாக உருவெடுக்கின்றது ஆகலின் நாட்டுத் தொண்டாம் போருக்கு மனை மாட்சி எங்ஙனம் முரண்பட்டிருக்க முடியும்! மன்னன் போருக்கு சித்தமானான் என்ற சேதி எட்டியவுடன் மங்கையின் மலர்க்கரத்திற்கு முத்தமிட்டு, படைக் கலக்கொட்டில் நோக்கி விரைந்திட்ட மாண்பு மிக்க மறத்தமிழர் அவர்கள்· வேந்தன் வெம்போருக்கு சினந்தெழுந்தான் என முழவு அதிர்ந்தது அறிவித்தது· "ஆருயிரே" பாசறை அழைக்கின்றது. சென்று வருகிறேன், கண்ணே! கலங்காதே" என்று கண்கவர்ந்த கட்டழகன் ஆறுதல் மொழிய வேண்டிய அவசியமில்லாத வகையில், கண்ணாளா, காவலன் முரசம் அறைந்தான். போர்க் கடமை ஏற்க தவறி விடாதீர்கள். வேலும் வாளும் நெய் பூசப்பட்டு கூர்மையாக பலியை எதிர்பார்த்து ஏங்கி நிற்கின்றன. பாசறைக்கு விரைந்து செல்க என்று முல்லை முறுவலோடு மெல்லியலாள் கூறிப் பூரிக்கும் பூவையரைக் காண்கின்றோம், ஏந்திழையாள் எடுத்துத்தந்த கேடயந்தாங்கி அணிவகுப்பில் கலந்து கொண்ட மறக்குடி வீரர்கள் அவர்கள். ஊரினில் அறம் ஓங்குதற்கே குடும்ப வாழ்வு என்ற வாழ்க்கைச் சித்தாந்தம் ஏட்டிலல்ல, நாட்டில் நடைமுறையில் பதிந்திருந்ததின் பயன் மக்கள் பாதுகாப்பிற்குப் பின்னரே பாவையரின் பாகுமொழி என்ற நிலை ஆடவர்க்கு, வாகைக்குப் பின் சல்லாபம் என்ற நிலை வஞ்சியர்க்கு. திருமண ஒப்பந்தத்தின்போது கட்டுடல் உடையவனு, மிடுக்கான தோற்றமுண்டா, என்பவையல்ல சிற்றிடையாள் சிந்தித்தது. உடலுக்கேற்ற உள்ளத் துணிவு உண்டா, பங்கேற்றுக் கொண்ட போர்கள் எத்தனை என்பவற்றை கணக்கெடுத்துக் கொண்டாள். வேந்தன் வெகுண்டபோது ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு ஒலிக்குந்தோறும் தனது கொழுநன் யானையை எதிர்க்கும் ஆர்வங் கொண்டான் எனக் கேட்டுக் களித்தாள். வாளைச் சுழற்றினான், காளையர் வீழ்ந்தனர், களிறுகள் வெருண்டன—போர்க்களத்து சேதி அவளது இதய வீணையை மீட்டியது. பறையோசை கேட்டபோது, அன்பே அரசனாணை மீறுவரோ என்று குமரியின் கரம் அழுத்தி முத்தமிடுகையிலே வடுவற்ற முழுமதி எனமுகவதனத்தோடு திகழ்ந்தவன், செருகளத்தில் கொற்றங்கண்டு மீண்டுவந்து முத்தமிடுகையில் முகத்திலே வடுகண்டு வாடாமல வீரத்தின் அறிகுறி அதுவே என்று அகமகிழ்வது அக்கால பெண்டிர்க்கு இயல்பு

ஊருக்கு காப்பளிக்க நெஞ்சுரம் வாய்க்கப் பெறுகவனை கொழுநனாம் பாக ஏற்க மலர்க்கொடியாம் கன்னிகைக்கு மனமொப்பவில்லை அன்று. தன்னைக் கொண்டவன் படைக்கஞ்சான் என்ற பொற்பு பாவையருக்கு திகட்டாததேன்· வீரமடி நானுனக்கு—வெற்றியடி நீ எனக்கு—என்பது அவர்களுடைய இதயங்கள் இணைந்து மீட்டிய காதற்கீதம்.

கட்டுடல், விரிந்த மார்பு, குன்றனைய தோள், மிடுக்கான நடை—இவை மட்டுமல்ல அவ்வனிதையை வசீகரப்படுத்தியவை. பங்கெடுத்துக்கொண்ட போர் முகங்கள், செருகளத்துற்ற வடுக்கள், பாய்ந்து வந்த புலியைக் கொன்று கொணர்ந்த புலிப்பல், அப்பற்கள் கோர்க்கப்பட்ட மாலை — இவைதான் பெண்பேச வந்த இளைஞன் எடுத்துணர்த்தியவை. ஆயினும் மேற்கண்ட வகையில் வீரம் விளக்கதை தேன்மொழியாள் நேரிற் கண்டவை அல்ல. நேரில் காணாமல் முடிவெடுப்பது முறையாகாதன்றோ! கண்ணெதிரே காளை மாட்டைத் தழுவும்படி பணித்து வெறியூட்டப்பட்ட ஏறு தழுவி அடக்கி ஆற்றலைப்புலப்படுத்திய போதே வீரத்திற்கு தன்னைப் பரிசாக உவந்தளிக்க சித்தமானாள்.

வாலிபம் வழங்கிய சிறப்புகள்—வீரமும் காதலும் பருவம் வீரத்தைமட்டும் வித்திட்டு வளர்க்கவில்லை, காதலையும் குழைத்தே தந்திருக்கிறது. இரண்டிற்கும் வஞ்சகமின்றி கடன் முடிப்பது முறையாகும் என்பதை தெள்ளத் தெளிய உணர்ந்த அணங்கு கட்டழகனின் வீரத்தை அளந்தறிந்த பின்னர் அவனை மனக்கோட்டையில் சிறைப் படுத்தினாள்.

ஊரின் வெளியில் தொலைவில், புறநகரில் களமமைத்து போர் நிகழ்த்திய காலை, நகரில் தனது சிந்தைக்கினியவளிடம் விடை பெற்று போர்ப்படியை அடைந்த வீரனொருவன், பாசறையில் உட்கார்ந்தவாறே மாலை நேரத்தில் எழிலைச் சுவைக்கிறான்· மாலையில் பூக்குமாமே காதல் நோய்! அவனையறியாமலே காதல் கருத்து எழுகின்றது அந்தஉணர்வை தூண்டியது ஊர் திரும்பிச் சென்று கொண்டிருக்கும் காளைமாடும் அதனோடு இணைந்து செல்லும் பசுவும் பைம்புற்றரையை நாடி அகநகரினின்று புறத்தேஓட்டிச்செல்லப் பட்டவை அவை, அன்றாடம் அவை அவ்வாறே செல்வது வாடிக்கையாதலால் வீடு திரும்பவும் பாதை பழக்கப்பட்டது, பசுவுடன் ஊர் திரும்புவதில் அவற்றிற்கு எத்துணை களிப்பு! தன் வரவினை எதிர் நோக்கி, மாலைப் பொழுதை தனியாகக் கழிக்க இயலாமல் வாடிநிற்கும் வனிதை இளைஞனின் இதயத்திரையில் தோன்ற ஆதாரமான அற்புதக் காட்சி! குடும்ப பாசம்—இல்லை, காதலின் கவர்ச்சி எழத்தகுந்த சூழ்நிலையா அது! இல்லையே· போர்க் கடமை முடியுமுன்னர் அத்தகைய நினைவு எழுவதும் முறையல்லவே! ஆயினும் அத்தகைய எண்ணங்கள் அவனுள்ளத்தில் நிழலாடுகின்றன· ஒரு எண்ணம் தோன்ற வேண்டாத நிலையில் அந்த எண்ணம் எழுந்தால் அதனை சபலம் என்றழைப்பர் போர் முழக்கம் செவிக் கெட்டிய ஞான்று பாசறையை நோக்கி விரையுமாறு உணர்த்திய நெஞ்சமே மாலை நேரத்தின் மந்தகாசத்தால்மனம்வருந்துவானேன்என்று வினவுகிறான், நெஞ்சத்தின் மீதே குற்றஞ் சாட்டி விடை காண்கிறான். கேள்வியும் விடையும் கவிதையாகப் பிறக்கின்றது. சங்கங்கண்ட மக்களின் சொல்லோவியம் வேறு எப்படியிருக்க முடியும்! ஐங்குறுநூறு என்னும் திரட்சியில் ஒரு காட்சி கீழே காண்பது·

"புகழ்நூல் சிறப்பின் காதலி புலம்பத்
துறந்து வந்தனையே அருந்தொழில் கட்டூர்
நல்லேறு தழீஇ நாகுபெயர் காலை
உள்ளுதொறும் கலிழும் நெஞ்சம்!
வல்லே எம்மையும் வரவிழைத்தனையே"

[புகழ்நூல்—பல்வேறு நூல்கள்; சிறப்பின்—சிறப்புடைய; புலம்ப—ஒப்புதல் கூற; துறந்துவந்தனையே—அவளைவிட்டு வந்தாயே; அருந்தொழில்—போர்த் தொழில்; கட்டூர்—பாசறை; நல்லேறு—நல்ல காளை மாடு; தழீஇ—இணைந்து; நாகு—பசு, பெயர்காலை—ஊருக்குச் செல்லும்பொழுது; உள்ளுதொறும்—நினைக்கும் பொழுது; கலிழும்—வருந்துகின்ற வல்லே—விரைவில்; எம்மையம்—என்னையும் வரும்படி; விழைத்தனையே—விரும்பினையே.]

காதலன் தன் நெஞ்சோடு பேசிக் கொள்கிறான் புகழ்நூல் கற்ற காரிகை தனக்கு இல்லக்கிழத்தியாக அமையப் பெற்றது குறித்து மகிழ்ச்சி எய்துகிறான். நூல்கள் புகழ்ந்திடும் தனிப் பண்பாடுடையவள் என்ற எண்ணம் அவள் பேச்சில் எதிரொலிக்கின்றது. நாட்டைக் காக்க உயிரையும் தியாகம் செய்ய வேண்டிய நிலைமையை உண்டாக்குகின்ற போர்—தொழிலாம்; அதுவும் அருந்தொழிலாம். போர் முகத்திற்குப்போ என்று உணர்த்திய அதே உள்ளம், மாலையில் வீட்டை நோக்கி நடைபோடும் பசுக்கூட்டத்தைக்கண்டவுடன் காதல் எண்ணம் மலரச் செய்வது குற்றமல்லவா என்று நெஞ்சத்தைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றிவிடுகிறான் இளைஞன்· கடமை மறவாத நெஞ்சம்—செய்வதற்குரிய கடமைகள் இரண்டு, போர்—காதல். ஒரே சந்தர்ப்பத்தில் தோன்றுபவை, எங்ஙனம் இரண்டையும் ஏககாலத்தில் மேற்கொள்வது என்பது அவனது தவிப்பு. ஒத்த பொறுப்புணர்ச்சியோடு நேர்மையாகக் கடமைக்கு கட்டுப்பட்டு செயலாற்றுவது எத்தனை அரிது· நெஞ்சத்தைக் கேட்கும் கேள்வி அவனது கட்டுப்பாட்டின் சலனமற்ற படப்பிடிப்பு· வாழ்க்கைச் சித்தாந்தத்தில் முளைத்த முக்கிய கேள்வி· வீரமும் காதலும் ஏறு போல பீடுநடை போட்டுச்சென்ற காலமல்லவா! தற்காலம் போல 'பஞ்சாட்சரத்தை நினையாதேன் நெஞ்சே' என்பதை வாழ்வின் அடிப்படைக்கேள்வியாகப்பாவிக்கும்வேதாந்தத்தில் ஊறியுள்ளவர்களுக்கு சங்க காலக் காட்சி மருட்சியைத்தான் உண்டாக்கும். காதலும்வீரமும்—வெறியையூட்டும் பருவக் கோளாறு என்பவர் நம்மவர். இல்லை பருவம் பரிவோடு வழங்கிய பாங்கான பரிசென்போம் நாம். கடமையுணர்ச்சியை விளக்குகின்ற எந்த தத்துவார்த்தமானாலும் வாழ்வின் பயன் துய்க்க வழிவகுத்தேயாக வேண்டும்· அவ்வகையில் பாசறையில் நாட்டுக் கடமையை செய்து தீர்க்க விரைந்து சென்றபோது தேன் மொழியாளைப் பற்றி எண்ணிடும் நெஞ்சை தட்டிக் கேட்கும் பண்பாட்டிற்கு ஒத்த முறையில் மீண்டும் சமுதாயநிலை பிறக்க வேண்டும். அந்நிலை பிறக்க வழிவகுப்போர் எவர் என்ற கேள்வி இன்றையஇளைஞர்களை எதிர்த்துள்ளது. இளைஞர்கள் முடிவெடுக்க வேண்டும் கடமை உணர்ச்சியோடு.

—ஏ. டி. பிரான்சிஸ்.

தேனடை!

பிழித்தல் : டபிள்யூ

விருந்து வந்தவர் தம்மினத்தவர் அல்லக்கால், அவர் எத்துணைப் பசியோடிருப்பினும் அவரைப் புறத்தே வருந்தியிருக்க வைத்துக் கதவடைத்துத், தாம் அகத்தே தம்மவரோடிருந்து விலாப்புடைக்கத் தின்று தாம் தின்று மிகுந்ததைப் பின்னர் அவ்விருந்தினர்க்கு இடும் ஆரியப் பார்ப்பனர்தம் தந்நல வொழுக்கம், பண்டை நம் தமிழாசிரியர் மாட்டும், அவரது ஆணைவழி யொழுகிய உயர்குடிப் பிறப்பினரான பண்டை நம் வேளாண் மாந்தர் மாட்டும் இல்லை.

இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த கம்பரென்னும் புலவரால் பாடப்பட்ட இராமாயணம், வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணத்தைப் பார்த்துச் செய்யப்பட்டதாயினும், அதனினும் பார்க்கப் பொய்ம்மை நிறைந்ததாய்ப், பழைய தமிழாசிரியர் கைக்கொண்ட இயற்கை வழக்கொடு மாறுபட்டதாய்த் தோன்றினமையான், அக்கம்பர்க்குப் பிற்பட்டிருந்த சிறந்த உரையாசிரியர்களாலும் அஃது ஏற்றுக் கொள்ளப் படாததாயிற்று.

ஒரு மக்கட்கூட்டத்தவராய் ஒற்றுமையும் வலிமையுங் கொண்டு வாழ்ந்தவர், பலவேறு மக்கட் பகுப்பினராய்ப் பிளவுபட்டு ஒற்றுமையும் வலிமையும் இழந்து வறுமைப்பட்டுத் தாழ்வது, அவர் தமது பண்டை மொழிச் சொற்களைப் பலவாறு திரித்துப் பேசி அயன் மொழிச் சொற்களையும் எடுத்துச் சேர்த்து வழங்குதலினாலேயாம்

ஓராவிற்கு இருகோடு தோன்றினாற்போல ஈருடம்பின் ஒருயிராய்க் கருதுந்தூய காதலன்பு 'மிளிர்தல் வேண்டும்'

மக்கள் ஒவ்வொருவருந் தங்கடங்கட்கு வேண்டாதனவாயுள்ள கொந்தளிக்கும் விழைவுகள் மனச்சாய்வுகள் மனநோய்ம்மைகள் முதலானவற்றை விலக்கிக் கொள்ளுகின்றிலரே!

—மறைமலையடிகள்

கலை அரங்கம்

'தம்பி'

வடகலையும் தென்கலையும்

●

சேரன் தம்பி

தமிழ்ப்பட உலகிலே புதியநிலை வளர்ந்து வருகிறது. இந்திப்பட தயாரிப்பில் அதிபர்கள் எல்லோரும் ஆசைகளை பதித்து, அதற்காக மனிதர்களை மட்டுமல்ல—பறவைகளையும், மிருகங்களையும் கூட எங்கிருந்தெல்லாமோ தருவித்து சென்னையை பெரிய காட்சிசாலையாக்கி வருகிறார்கள்.

இந்திப்படமோகம் என்பது புதிய சேதியல்ல—சென்ற சில வருடங்களாக மெல்ல, மெல்ல இந்த ஆர்வம் செழித்து, இன்னாளில் உச்சநிலையை அடைந்திருக்கிறது எனலாம்.

வாசனார் 'சந்திரலேகாவை' வடக்கே பவனி வரச்செய்தார். பிரமாதமான விளம்பரங்களாலும், 'முதல் படம்' என்ற தன்மையிலும் சந்திரலேகா அவருக்கு வெற்றியை அள்ளித் தந்தது. பின்னர் அவர் தயாரித்து அனுப்பிய 'நிஷான்' மங்களா, சன்சார், மிஸ்டர் சம்பத், 'பஹீத்தின் ஹூயே' 'தோதுல்ஹ்' ஆகியவை முதல் படம் பெற்ற வாழ்த்தை பெறாதது மட்டுமல்ல—சில பரிதாபகரமாக தோல்வியடைந்தன. எனினும் வாசனார் வட பகுதியினர்க்கு அறிமுகமானார். இந்திய திரைப்பட உலகில் அவரும் ஒரு 'இலட்சியமாக' மதிப்படைந்தார். அவரைத் தொடர்ந்து ஜூபிடர் கம்பெனியார் 'மர்மயோகி'யை சரி செய்து 'ஏக்தா ராஜா'வாக அனுப்பினார்கள். குறைந்த செலவில் தயாரான அது நல்ல வசூலை வாரித்தந்தது. இரண்டாவதாகச் சென்ற மனோகரும் அதே மதிப்பை பெற்றது!

மேற்கூறிய படங்கள் அனைத்தும் பெரும்பான்மையான தமிழர்களின் ஒத்துழைப்போடு உருவானவை. இந்தி மொழிக்காக 'டெக்னீஷியன்கள் மட்டுமே வடக்கிருந்து வரவழைக்கப்பட்டனர். ஏவி எம். வேலு அவர்கள் 'பஹார்', 'லட்கி', 'சிவ பக்தா' ஆகிய படங்களை இந்தியில் தயாரித்தனர். தென்னிந்திய கலைஞர்கள் மிகப்பலர் இவைகளில் நடித்தனர். முதலிரண்டு படங்கள் வியக்கத்தகு வெற்றி படைந்தன. அண்மையில் தயாரிக்கப்பட்ட 'ஆசாத், தென்னிந்திய திரை உலக வெற்றிக்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல அமோக ஆதரவு பெற்றது. இந்த வெற்றிகள் தூங்கிக் கிடந்த படாதிபர்களை தோள்தட்ட வைத்திருக்கிறது. எல்லோரும் 'இந்தி தயாரிப்பில்' மனம் இழந்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

இந்த பட்டியலை கவனித்தால் தென்னிந்தியாவினர் 'இந்தி' மார்க்கெட்டை தங்களின் தோட்டத்திலே அறுவடை செய்கிறார்கள் என்றேஎண்ணிடத் தோன்றும். பிரச்னையை விரிவாக்கினால் எல்லாமே சூன்யம்தான்! தென்னாட்டினர் போலவே வடக்கத்தியினரும் 'தமிழ்ப் படங்களை' தயாரித்தனர்—அவையின் 'லட்சணங்கள்' கோணல்மாணல்தான்!

'ஆன்', 'ஆனந்த மடம்' 'அவன்' ஆகிய மூன்று படங்களை அவர்கள் தயாரித்தனர், தயாரித்தவர்களோ வடநாட்டு திரைப்பட உலகின் 'ஒளிவிளக்குகள்...மெஹ்பூப், முக்கர்ஜி, ராஜகபூர் போன்றவர்கள்—இவர்கள் சாமான்யர்களல்ல. எனினும் எல்லாமே படுதோல்வியே பெற்றன— தமிழர்களை சினிமா பார்த்திராத 'காட்டுமிராண்டிகள்' என்று எண்ணி தயாரித்தார்களோ என்னவோ? சித்திரவதை செய்யப்பட்ட மொழி, பண்பற்ற கலாச்சாரம், அலங்கோலமான அமைப்புமுறை போன்ற குறைபாடுகள் மட்டுமல்ல—அனைத்துமே 'டப்பிங்' செய்யப்பட்டவை—தென்னாட்டு நடிகா ஒருவர்கூட தோன்றவில்லை. 'ஆன்' படத்திற்காக பி. எஸ். ராமய்யா லண்டன் பார்த்து வந்ததுதான் மிச்சம்! அன்னாளில் பழைய 'ராம்ராஜ்யா' படப் பிரதியை வாங்கி ஏவி எம் வேலு தாமே தமிழாக்கி வெளியிட்டார்—அதுபெற்ற வெற்றிகூட வடக்கத்திய படங்கள் பெறவில்லை, இவைகளின் 'தோல்வி முகாரி' கேட்ட சில பம்பாய் பட அதிபர்கள் தமிழ் படம் தயாரிக்கும் எண்ணத்தை நழுவ விட்டனர்—இங்கிருந்துபோன எழுத்தாளர்களும் ஏமாற்றத்தோடு திரும்பினர்.

நம்மவர்களின் 'கலாசேவையால்'—இந்திபட மோகத்தால் அங்கே கேட்பாரற்றுக்கிடந்த சில நடிகர்களுக்கும், கருகிப்போன பல எழுத்தாளர்களுக்கும் வாழ்வு கிடைத்திருக்கிறது. பிறரின் வெற்றிக் கண்டு சென்னையில் பெரும்பான்மையோர் இந்திப்படங்கள் எடுக்கிறார்கள் என்பதை தெரியாதவர்களா வடநாட்டு கலைஞர்கள்......எண்களின் பின்னால் பூஜ்யங்களை தாராளமாக அடுக்கி காட்டி, பெருந்தொகைகளை ஊதியமாக் கேட்கிறார்களாம்! நம்ம பட முதலாளி என்ன செய்வார்! பாவம்! இவர் தமிழ் தெரியாத கலைஞர்களுக்குகூட பாட, ஆட, நடிக்க எல்லாவற்றிற்குமாக சேர்த்து 75,000 ரூபாய்க்கு மேல் கொடுத்தறியாதவர். பாட்டு எழுதுபவருக்கு 8000, அதற்கு இசையமைப்பவருக்கு 1,50,000, அதனைப்பாடும் லதாவுக்கு பாடல் ஒன்றுக்கு 5000, அதற்காக வாயசைத்து நடிக்கும் அம்மையாருக்கு 50,000...பொருளாதார புள்ளி விபரம் இப்படி போகிறது......! நம்மவரோ ஒரு பாட்டிற்கு சில வாகும் தொகையை வைத்துக் கொண்டே ஒரு படத்தை தயாரித்து விடுவார்...இந்தி தெரியாத அவருக்கு இதெல்லாம் ஹாலிவுட் 'மாடலாகத் தோன்றினாலும் விந்தையில்லை. எப்படியோ ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. தென்னிந்திய படாதிபர்கள் இந்தி மார்க்கெட்டை பிடிக்கும் 'லட்சணம்' இது!

வட நாட்டினரோ இரண்டொரு படங்களை தயாரித்து பார்த்து புத்திசாலித்தனத்தோடு அமைதியாகி விட்டார்கள், அவர்கள் அனுப்பும் இந்திப்படங்களே இங்கே அமோக வெற்றியை பெறுகின்றன. இது போல தமிழ்ப்படங்கள் வடக்கே வெற்றி பெற்றால் மார்க்கெட்டை பிடித்து விட்டதாக பூரித்துப்போகலாம் — அதை விட்டு படத்தின் எல்லா பகுதிகளையும் அவர்களிடமே கொடுத்தால் என்ன பொருள்! தென்னாட்டு பொருளாதாரத்தை அவர்கள் தங்களின் வெற்றிக்காக பயன்படுத்தினார்கள் என்பது தானே!

'எங்களுக்கெல்லாம் உபசாரம் அமோகமாக நடைபெறுகிறது. நாயுடுவும் சோமசுந்தரமும் வேலுவும் செய்யும் மரியாதையால் நாங்கள் திணறிப் போகிறோம்'' வடநாட்டு கவிஞர் ராஜேந்திரர் கிருஷ்ணன் சொல்கிறார் இப்படியெல்லாம். உண்மை தானே! இவர்களுக்குள்ள மவுசு வடக்கே சென்றுவல்லவா தெரியும்...புதிய வருகை பிரமிப்பைத் தானே தரும் முதலில்!

வடக்கிருந்து பெரும் படையே சென்னையில் குவிகிறது. இவர்களுக்கு ஆயிரமாயிரமாக அள்ளித் தரும் படாதிபதிகள் எத்தகைய மனத்தினர்? இது சமயம் நாம் இதுபற்றி அதிகம் விவரிக்க விரும்பவில்லை இந்தப் பண்பினர்தான் வடக்கத்திய தாரகைகள் தங்குவதற்காக சென்னையிலே 'புதிய சொர்க்க லோகத்தையே' சிருஷ்டிக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்...

ஆனால் ஒன்று, முன்பெல்லாம் சில படாதிபதிகள் 'நாங்கள் கலைக்காகவும் பாடுபடுகிறோம்' என்று பேசிவந்தார்கள், எல்லை மீறிய இந்தி மோகம் அத்தகையோரின் முத்திரைகளை கிழித்துவிட்டிருக்கிறது. பணத்திற்காக எதையும் செய்யும் பண்பினர்களாக நமக்கு காட்சியளிக்கிறார்கள் ஜெமினி அதிபர் வாசனார் மேனாட்டிலிருந்து தருவித்த குரங்குக்காக புதிதாக கதையையே எழுதி படம் ஒன்றை தயாரிக்கப்போகிறாராம்! விசித்திரமாயில்லையா?

இந்த நிலை வளர்ந்தால், சென்னை முழுக்க முழுக்க இந்தி பட தயாரிப்பு நிலையமாகிவிடும்—அதுமட்டுமல்ல. தமிழ்ப்படங்களின் இன்றைய வளர்ச்சிக்கும் வாழ்விற்கும்கூட பழுது ஏற்பட்டுவிடும். வடநாட்டினர் பெற்றிருக்கும் கலை அறிவையோ திறனையோ குறை கூறுவது நமது எண்ணமல்ல. —தொழில் முறையில் இது லாபகரமான முயற்சியாகக்கூட தோன்றலாம். அந்த தோற்றம் 'கானல் நீர்' என்பதை மறுப்பதற்கில்லை.

இந்த பிரச்னையிலே விசித்திரமான —ஆனால் சிந்தனைக்குரிய பின்னல் விழுந்திருக்கிறது. எதிர் காலம் தரும் விளைவுகளை தமிழகம் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்.

★

'அத்தான்'

★

9—7—55 சனி மாலை 6—30 மணிக்கு சென்னை மீர்சாகிப்பேட்டை அழகிரி நாடக மன்றத்தாரின் முதல் முயற்சியான 'அத்தான்' எனும் சமூக நாடகம் 'பிரசண்ட விகடன்' ஆசிரியர் தோழர் நாராண துரைக்கண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கதை வசனம் தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்களால் தீட்டப்பட்டது. காலத்திற்கேற்ற முறையில்—விறுவிறுப்பான சம்பவங்கள் கொண்ட தொடர்பான வசனங்களோடு உருவாக்கப்பட்டிருக்கிறது.

பாடல்களும் கருத்துடன் கூடிய வகையில் கவிஞர் கண்ணதாசன் பூவை. செங்குட்டுவன் ஆகியோரால் இயற்றப்பட்டதாகும்.

ஜமீன்தார் தனிக்கோடி முதலியாராகத் தோன்றிய தோழர் டி, ஏ. வெங்கிடாசலம், சில ஜமீன்தார்கள் ஆடம்பர வாழ்க்கையிலும் படாடோப முறையிலும் எவ்வளவு வெறித்தனம் கொண்டலைகின்றனர் என்பதையும் தாங்கள் ஜமீன்தார்கள் என்ற காரணத்தாலேயே எதையும் செய்யலாம் என்றெண்ணி தனது மருமகளையே கற்பழிக்க முயற்சிக்கும் கட்டத்திலும் பயித்தியக்காரனாக தோன்றும் போதும் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் நடித்தார்.

தங்கையின் மீது அளவில்லா அன்பு செலுத்தி —தங்கையின் கலப்புத் திருமணத்திற்கு முழு ஆதரவு தந்து—தங்கையின் வாழ்வே தனது வாழ்வு என எண்ணி கொள்கை முழக்கம் செய்து சம்பத்தாக நடித்த தோழர் மு. புரட்சிமணி, தாம் ஏற்றுள்ள பாத்திரத்திற்கேற்ப நடிக்க வேண்டும் என்று எடுத்துக்கொண்ட முயற்சியை உண்மையிலேயே பாராட்ட வேண்டியதுதான். இருப்பினும் அவரின் குரல் ஏனோ நாடகத்தன்று 'ஒத்துழையாமை' செய்து விட்டதால், வசனங்களின் ஒலிப்பு சரியாக இல்லாமல் போயிற்று. அதனால் நடிப்பிலும் எதிர்பாராவிதமாக சில தவறுகள் ஏற்பட்டன, எனினும் அடுத்து இந்நாடகம் நடைபெறும் பொழுது இக்குறைபாட்டிற்கு இடமிருக்காதென்றே நம்புகிறோம்.

வழக்கறிஞராக நடித்த தோழர் கன்னியப்பன் நடிப்பும்—வசன உச்சரிப்பும் மிக நன்றாக இருந்தன. இவரது நடிப்பே 'கோர்ட் ஸீன்' வெற்றியடைய மூலகாரணமா யிருந்தது,

மற்ற தோழர்களும் அவரவர்களின் பாத்திரங்களுக்கேற்ப—கூடுமானவரை நல்ல முறையிலேயே நடித்திருக்கிறார்கள்,

மரகதமாக தோன்றிய தோழியர் மனோகரி 'குடும்ப விளக்காக' நடித்ததோடு அவ்வம்மையார் பாடிய பாடல்களும் நல்விருந்தாக அமைந்தன

சகுந்தலாவாக நடித்த தோழியர் வி சரஸ்வதியின் நடிப்பும் ரசிகர்களின் பாராட்டுதலை அமோகமாகப் பெற்றது,

இடையிடையே மக்களின் மனத் தளர்ச்சியை மாற்றி நகைச்சுவை மூலம் களிப்புறச் செய்த பெருமை முத்தழகனாக நடித்த தோழர் சாரங்கன் முத்தழகியாக நடித்த தோழியர் ஆண்டாள் ஆகியோரின் திறமையே என்று கூறின் பொருந்தும்,

பயிற்சி தந்த தோழர் தன்ராஜ அவர்கள் கூடுமானவரை தமது ஆற்றலைக் காட்டி யிருக்கிறார்.

சில நடிக—நடிகைகள் சீன் முடிவதற்கு முன் எழுந்திருப்பதும் குறுக்கே செல்வதும், வேகமாக வசனங்களை பேசுவதும் சற்று திருத்திக் கொண்டால் இந்நாடகக் குழுவினரின் முயற்சி முழுவெற்றியளிக்கும்.

அழகிரி நாடக மன்றத்தார் இந்நாடகம் மூலம் தங்களின் ஆர்வத்தை எடுத்துக் காட்டியுள்ளனர், அஞ்சாநெஞ்சன் அழகிரி அவர்களின் பெயரால் நிறுவப்பட்டுள்ள இந்நாடக மன்றத்தினர் கட்டுக்கோப்பாக இருந்து மேலும் பல நாடகங்களை இனிது நடத்தி அதன் மூலம் சமுதாயத்தில் மலிந்துள்ள அநீதிகளை அகற்ற ஆவன செய்வார்களென்று நம்புகிறோம்.

—எம். கே மூர்த்தி

●

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 16, ரிலையன்ஸ் ரைஸ்மில் தெரு. சென்னை 1.